இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 - முரசு : 82 - ஒலி : 177 - திருவள்ளுவர் ஆண்டு 2055 - தை 24 - புதன்கிழமை 07 பிப்ரவரி 2024 - கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 177 : Thiruvalluvar Year - 2055 - Thai 24 - Wednesday 07 February 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## உங்கள் தாய் மண்ணான

# தமிழ்நாட்டுக்கு என்றும் துணை நிற்பீர்!

## ஸ்பெயின் வாழ் தமிழர்களிடையே முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

**மேட்ரிட் (ஸ்பெயின்) பிப். 7 -**

**“உங்கள் தாய் மண்ணான தமிழ்நாட்டுக்கு என்றும் துணை நிற்பீர்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஸ்பெயின் வாழ் தமிழர்களிடையே உரையாற்றும் போது உருக்கமுடன் கூறினார்.**

தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஸ்பெயின் நாட்டில் உள்ள பல்வேறு முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகளை நேரில் சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள வலியுறுத்தி வருவதுடன், பல்வேறு முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, “ஸ்பெயின் தமிழர்களுடன் முதல்வர்” எனும் நிகழ்வில் ஸ்பெயின் நாட்டில் வாழும் தமிழர்களிடையே 04.02.2024 அன்று கலந்துரையாடிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாட்டில் இருக்கிறோமா அல்லது வெளிநாட்டில் இருக்கிறோமா என்று எனக்கு இப்போது சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஸ்பெயின் நாட்டிற்கு இப்போதுதான் நான் முதல் முறை வருகிறேன். ஆனால், பல முறை வந்ததைப் போன்ற உணர்வைத் தரும் வரவேற்பை நீங்கள் அளித்திருக்கிறீர்கள். கடல் கடந்து வந்து வெளிநாட்டில் வாழும் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 04.02.2024 அன்று “ஸ்பெயின் தமிழர்களுடன் முதல்வர்” எனும் நிகழ்வில் ஸ்பெயின் நாட்டில் வாழும் தமிழர்களிடையே உரையாற்றினார். இந்நிகழ்வில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, முதலமைச்சரின் செயலாளர் டாக்டர் பு. உமாநாத், ஸ்பெயின் நாட்டிற்கான இந்தியத் தூதர் தினேஷ் பட்நாயக் மற்றும் திருமதி. துர்கா ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நீங்கள் பிறந்த உங்களுடைய தாய் மண்ணான தமிழ்நாட்டிற்கு உங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும், செய்து கொண்டிருக்கிறீர்கள்; செய்யப் போகிறீர்கள்; செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**தலைவர் கலைஞர் உருவாக்கிய அமைப்பு!**

அயல்நாட்டில் இருக்கக்கூடியவர்களுக்காகவே துணை நிற்க வேண்டும் உதவி புரிய வேண்டும் அவர்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் ஆபத்து ஏற்பட்டால், அதற்குத் தமிழ்நாடு துணை நிற்க வேண்டும் என்ற அடிப்படையில் தான், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். ஆனால் சில நாட்களுக்குள்ளாக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதனால் அது செயல்படாமல் போய் விட்டது.

இப்போது மீண்டும் தலைவர் கலைஞர் வழியில் நடைபோடும் நமது திராவிட மாடல் ஆட்சி உருவாகி இருக்கிறது. தலைவர் கலைஞர் என்ன செய்ய வேண்டும் என்று நினைத்தாரோ, அதனை நாங்கள் செய்ய காத்திருக்கிறோம்; தயாராக இருக்கிறோம்.

**வெளிநாடு வாழ் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு!**

அண்மையில் கூட, வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்களைச் சென்னைக்கு வரவழைத்து, அவர்களுடன் கலந்து பேசி; இதுவரை அவர்களை இரண்டு மூன்று முறை அழைத்துக் கூட்டம் போட்டு கலந்து பேசி, அவர்களது பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைத்திருக்கிறோம்.

**உலக முதலீட்டாளர் மாநாடு தமிழ்நாட்டிற்குப் பெருமை!**

உலக முதலீட்டாளர் மாநாட்டை அண்மையில் வெற்றிகரமாக நடத்தி, அதன் மூலமாகத் தமிழ்நாட்டிற்குப் பெருமையைத் தேடித் தந்திருக்கிறோம். அது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; இந்தியாவிற்கு மட்டுமல்ல; இந்தியாவைக் கடந்து, இன்றைக்குக் கடல் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களுக்கும் அது பெருமை தான்!

**தங்களின் உபசரிப்பு என்னை நெகிழ வைக்கிறது!**

பல்வேறு வெளிநாடுகளுக்குச் சென்று இருந்தாலும், இந்த ஸ்பெயின் நாட்டிற்கு வந்திருப்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமைப்படுகிறேன். என் மீது ஒவ்வொருவரும் பாசமும் நேசமும் அன்பும் கொண்டு அளித்த அந்த உபசரிப்பு என்னை நெகிழ வைத்து இருக்கிறது. உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்வில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, முதலமைச்சரின் செயலாளர் டாக்டர் பு.உமாநாத், ஸ்பெயின் நாட்டிற்கான இந்தியத் தூதர் தினேஷ் பட்நாயக் மற்றும் திருமதி. துர்கா ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### முதல்வர் - கழகத் தலைவர் அறிவுரைப்படி

## நாடாளுமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகள் கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

### முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு - ஆர்.எஸ்.பாரதி - எ.வ.வேலு - தங்கம் தென்னரசு பங்கேற்றனர்!

*சென்னை, பிப்.7-*

*நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 22-01-2024 அன்று மாலை 5.00 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*ஜனவரி 21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட / மாநகர / பகுதி / ஒன்றிய / நகர / பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட “நிர்வாகிகள் சந்திப்பு” சென்னை, அண்ணா சாலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் 2024 ஜனவரி 24 முதல் பிப்ரவரி 5ஆம் தேதி வரை நடைபெற்றது.*

*இதில் கிருஷ்ணகிரி, திருவள்ளூர், சேலம், கோவை, நீலகிரி, திருப்பூர், நாமக்கல், ஈரோடு, பொள்ளாச்சி, தருமபுரி, சிவகங்கை, விருது நகர், தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, இராமநாதபுரம், கடலூர், சிதம்பரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், வேலூர், அரக்கோணம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வடசென்னை தென் சென்னை, மத்திய சென்னை, திருபெரும்புதூர், திருவண்ணாமலை, ஆரணி, பெரம்பலூர், திருச்சி, கரூர், திண்டுக்கல்,காஞ்சிபுரம், புதுச்சேரி ஆகிய நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட / மாநகர / பகுதி / ஒன்றிய / நகர / பேரூர்க் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்களை என மொத்தம் 3,405 பேர்கலந்து கொண்டனர். இதில் 617 பேர் மகளிர் நிர்வாகிகள்.*

*இந்நிர்வாகிகள் சந்திப்பு 2024 ஜனவரி 24 முதல் பிப்ரவரி 5ஆம் தேதி வரை தினந்தோறும் காலை, மாலை என இரு வேளையிலும் நடைபெற்றது.*

*இச்சந்திப்புகளில் தலா இரண்டு தொகுதிகளில் அடங்கியுள்ள நிர்வாகிகளை தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என். நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு ஆகியோர் கள நிலவரம், வெற்றி வாய்ப்பு, தேர்தல் பணி ஆகியவை குறித்து ஆலோசனை நடத்தினர்.*

---

### கரூர் மாவட்ட பெண்மணி

## அமுதவல்லியை - சிறு தொழில் முதலாளியாக உயர்த்திய முதலமைச்சர்!

### மாவட்ட தொழில் மையம் மூலம் உயர்ந்தவர் - முதல்வருக்கு நன்றி!

கரூர், பிப். 7 -

கரூர் மாவட்டம், ஆண்டான் கோயிலைச் சேர்ந்தவர் திருமதி.கே.அமுதவல்லி. அவர், வீடுகளுக்குப் பயன்படும், ஆடைகள் தயாரிக்கும் சிறு தொழிலில் ஈடுபட ஆர்வம் கொண்டிருந்தார். அந்த ஆர்வத்துடன், மாவட்டத் தொழில் மையத்தை அணுகி தான் சுயமாகத் தொழில்புரிவதற்குக் கடன் உதவிபுரியுமாறு கேட்டுக் கொண்டார்.

அமுதவல்லியின் தொழில் ஆர்வத்தின் அடிப்படையில், அவர் செய்ய விரும்பும் சிறு ஜவுளித் தொழிலை ஊக்கப்படுத்தும் நோக்கத்தில் அவருக்கு உதவி செய்திட மாவட்டத் தொழில் மையம் முன்வந்தது. அதன் பரிந்துரையுடன் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி திருமதி.அமுதவல்லி அவர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் வணிக சாம்பியன் திட்டத்தின்கீழ் 9 இலட்சத்து 87 ஆயிரம், ரூபாயை தொழில் கடனாக வழங்கியது. அதில் 35 சதவிகிதத் தொகை 3 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் அரசு மானியமாக திருமதி.அமுதவல்லிக்கு கிடைத்தது. மேலும், வங்கிக் கடன் தொகைக்குரிய வட்டியில் 6 சதவிகித வட்டித் தொகையையும் அரசு மானியமாக அவருக்கு அளித்தது.

இந்தக் கடன் உதவியோடு, அமுதவல்லி தன்னுடைய விருப்பப்படி, ஆடைகள் தயாரிக்கும் தொழிலில் தீவிரமாக ஈடுபட்டார். அதன் மூலம் அவருக்கு ஆண்டுக்கு 30 இலட்சம் ரூபாய்க்கு மேல் அவர் தயாரித்த ஆடைகள் விற்பனையாயின. இதில் அவருக்கு 8 இலட்சம் ரூபாய் லாபமாக கிடைத்தது.



குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயல்படுத்தும் முதலமைச்சர் அவர்களின் திட்டம் சாதாரண ஒரு பெண்மணியைப் புதிய தொழில் முகவராக மாற்றிச் சாதனை படைத்துள்ளது. மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் தன்னைத் தொழில் முதலாளியாக உயர்த்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு திருமதி.அமுதவல்லி நன்றி கூறி மகிழ்ச்சியில் திளைத்து வருகிறார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 07-02-2024



# நிதி அமைச்சருக்கு அவர் கணவரே பதிலளிக்கிறார் - 1

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இடைக்கால நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்துவிட்டார். இந்தியப் பொருளாதாரத்தை அவர் ஏதோ இமயத்துக்கு தூக்கி நிறுத்திவிட்டதாக ஊடகங்கள் உருட்டுவதைப் பார்க்கும் போது சகிக்கவில்லை. நீளமான உரையை வாசித்ததும் அவர் தானாம். குறைவான உரையை வாசித்ததும் அவர் தானாம்.

**பொருளாதாரத்தையே உயர்த்தி விட்டதாகவும், வறுமையையே ஒழித்துவிட்டதாகவும், காங்கிரஸ் ஆட்சி கால பொருளாதார சீர்குலைவு குறித்து வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யப் போவதாகவும், பொருளாதாரமே சீராகிவிட்டது என்றும், மக்களின் வருவாயும் அதிகமாகி விட்டதாகவும், மக்களின் சராசரி வருவாய் 50 விழுக்காடாக அதிகரித்துள்ளது என்றும் வாய்க்கு வந்ததை எல்லாம் வாசித்திருக்கிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.**

அவருக்கு வேறு யாரும் பதில் சொல்லத் தேவையில்லை. அவரது கணவர் பரகால பிரபாகர் அவர்கள் சொல்லி இருக்கும் சொற்களையே பதிலாகச் சொல்லலாம். 'The crooked timber Of new india' - என்ற அவரது நூல், 'புதிய இந்தியா எனும் கோணல் மரம்' என்ற தலைப்பில் வெளியாகி உள்ளது. (பத்திரிகையாளர் ஆர்.விஜயசங்கர் மொழி பெயர்த்து எதிர் பதிப்பகம் வெளியிட்டுள்ளது) லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் படித்தவர் இவர். 'மிட்வீக் மேட்டர்ஸ்' என்ற இவரது யூடியூப் சேனல் புகழ் பெற்றது. **இந்தியாவை பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் இணைந்து எத்தகைய கோணல் மரமாக ஆக்கிவிட்டார்கள் என்பதை புள்ளி விபரங்களோடு பரகால பிரபாகர் சொல்லி இருக்கிறார். அவரது கருத்தின் சில பகுதிகள் மட்டும் இங்கு எடுத்துரைக்கப்படுகிறது.**

* 1990ஆம் ஆண்டு தொடங்கிய காலகட்டத்தில் தற்போது முதன்முறையாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது.

* 2021ஆம் ஆண்டில் மட்டும் உலகத்தில் இருக்கும் ஏழைகளின் கூட்டத்தில் 75 மில்லியன் (7.5 கோடி) பேரை இந்தியா சேர்த்திருக்கிறது. இதன் காரணமாக, ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சித் திட்டத்திற்கான அமைப்பு (United Nations Development Programme) வெளியிட்டிருக்கும் 2021-22ற்கான உலக மனிதவளர்ச்சிக் குறியீட்டு எண் பட்டியலில் இருக்கும் 191 நாடுகளில் இந்தியா 131ஆவது இடத்தில் இருக்கிறது.

* இந்தியாவின் அண்டை நாடுகளான இலங்கை 73ஆம் இடத்திலும், சீனம் 79ஆம் இடத்திலும், பூடான் 127ஆம் இடத்திலும், பங்களாதேஷ் 129 ஆம் இடத்திலும் இருக்கின்றன. பாகிஸ்தான் (161), மியான்மர் (149), மற்றும் நேபாளம் (143) மட்டுமே இந்தியாவை விட மோசமான நிலையிலிருக்கின்றன. இந்த மூன்று நாடுகளுமே தம் நவீன வரலாற்றில் பெரும்பாலும் பெரும்பான்மை மதம் சார்ந்த நாடுகளாகவே இருந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

* 2022க்கான உலக பசிக் குறியீட்டு எண் பட்டியலிலும் கூட இந்தியா 107ஆவது இடத்திலிருக்கிறது. அதற்கு முந்தைய ஆண்டில் (2021) 101ஆவது இடத்திலிருந்தது.

* நாட்டில் வேலை வாய்ப்பு சரிந்து கொண்டே இருக்கிறது. மோடி அரசு 2016ஆம் ஆண்டிலிருந்தே வேலைவாய்ப்பு குறித்த புள்ளி விவரங்களை வெளியிடுவதில்லை.

* 2015 - 16ஆம் ஆண்டில் வெளிவந்த விவரப்படி, அதற்கு முன்பிருந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையின்மை 5% ஆக உயர்ந்திருந்ததும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

* அவ்வப்போது பல வித துறைகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தி வரும் தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகம் (National Sample Survey Office) 2017-18 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு, தொழிலாளர் எண்ணிக்கை ஆகியவை குறித்து கணக்கெடுப்பை நடத்திய போதும் விவரங்களை வெளியிடவில்லை; ஆனால் ஜனவரி 2019இல் வெளியான பிசினஸ் ஸ்டாண்டர்ட் பத்திரிகை அந்த விவரங்களைச் செய்தியாக வெளியிட்டது.

* நவம்பர் 2016இல் உயர் மதிப்புள்ள ரூபாய் நோட்டுகள் செல்லாதென்று மோடி அரசு வெளியிட்ட நாசகர அறிவிப்புக்குப் பின் வந்த முழு நிதியாண்டுதான் 2017-18. பிஸினஸ் ஸ்டாண்டர்ட் பத்திரிகையில் வெளியான செய்தியின் படி, 2017-18இல் வேலையின்மையின் அளவு அதற்கு முன் வந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்ந்து 6.1% ஆக இருந்தது. இந்தச் செய்தி வெளியான அடுத்த கணமே தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகத்தின் விவரங்கள் இறுதிப்படுத்தப்படாதவை எனவும், அவை பரிசீலனையில் இருப்பதாகவும், அந்தக் கணக்கெடுப்பு செய்த முறையில் பிரச்சினை இருப்பதாகவும் ஒன்றிய அரசு அறிக்கை வெளியிட்டது. அந்த அலுவலகத்தின் முழு அறிக்கை உடனடியாக ஒளித்து வைக்கப்பட்டது. இதுநாள் வரையிலும் அது வெளியிடப்படவில்லை.

*** ஒன்றிய அரசு வேலைவாய்ப்பு குறித்த விவரங்களை வெளியிடாத போதிலும், இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையம் (Centre for Monitoring Indian Economy) ஆகஸ்ட் 2022 இல் வெளியிட்ட அறிக்கையின்படி வேலையின்மையின் விகிதம் 8.3 விழுக்காடாக உயர்ந்திருந்தது. இந்தியாவின் வேலைவாய்ப்பு சந்தையில் 21 லட்சம் வேலைகள் இழக்கப்பட்டிருந்தன. அது இந்தியா உட்பட உலக நாடுகள் அனைத்தும் கோவிட்-19 பெருந்தொற்றின் மோசமான உலகத்திலிருந்து மீண்டு வந்து கொண்டிருந்த நேரம். நான் இதை எழுதிக் கொண்டிருக்கும் மார்ச் 2023இன் இறுதி நாட்களில் வேலையின்மை விகிதம் 7.76% ஆக இருக்கிறது.**

**- தொடரும்**

---

மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு பங்கேற்பு!

# திருவாரூர் புத்தக திருவிழா!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திருவாரூர், பிப் 07 –

திருவாரூர் மாவட்ட புத்தக திருவிழா கோலாகலமாக தொடங்கியது. 2.2.2024 முதல் 11.2.2024 வரை நடைபெறும் இந்த புத்தக திருவிழாவை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் திறந்துவைத்தார்.

சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, நகரச் செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் பங்கேற்றனர்.

தினந்தோறும் தலைசிறந்த அறிஞர்களின் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள், பொழுது போக்கு அம்சங்களுடன் லட்சக்கணக்கான புத்தகங்களுடன் தலை சிறந்த புத்தக நிறுவனங்கள் இடம் பெற்று உள்ளது.

புத்தக கண்காட்சி என்பது சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டுமே நடைபெறும். புத்தகங்கள் வாங்க வெளியூர் செல்ல வேண்டிய நிலையை மாற்றி திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இது போன்ற கண்காட்சிகள் நடத்தப்பட்டு புத்தகங்கள் கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

வாசிக்கும் பழக்கத்தை மட்டும் உருவாக்கி கொண்டால் போதும். அதற்காகத்தான் இந்த புத்தக திருவிழா நடைபெறுகிறது. வாசிக்கும் பழக்கம் வந்துவிட்டால் அது வாழ்க்கை முழுவதும் தோழானாகவே இருந்து கொண்டிருக்கும். இன்றைய உலகம் போட்டி நிறைந்த உலகமாக உள்ளது. இந்த போட்டி நிறைந்த உலகத்தில் நம்மை உயர்த்தி காட்டுவது நமது அறிவு மட்டும்தான். அந்த அறிவை வாசிப்பு திறனால் மட்டுமே மேம்படுத்த முடியும். பேசுவதற்கு முன்பு யோசிக்க வேண்டும். யோசிப்பதற்கு முன்பு வாசிக்க வேண்டும். இவைகளை வலியுறுத்தும் விதமாக இந்த புத்தக கண்காட்சி நடைபெறுகிறது.

நீடாமங்கலம் ஒன்றியக்குழு தலைவர் செந்தமிழ்ச்செல்வன், திருவாரூர் நகர்மன்ற துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர், கொரடாச்சேரி ஒன்றியக்குழு தலைவர் உமாபிரியா பாலசந்தர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள், புத்தக வாசகர்கள் கலந்து கொண்டனர்.




திருச்சி தேசிய கல்லூரியில் இன்று (7ஆம் தேதி) தொடங்கி 11 ஆம் தேதி வரை நடைபெற உள்ள 50க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து விளையாட்டு வீரர்கள் பங்கேற்கும் ICRS எனப்படும் பன்னாட்டு கருத்தரங்கம் தொடர்பாக பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்தியாளர்களை சந்தித்து பேசியபோது எடுத்த படம். அப்போது பேசிய அவர், பன்னாட்டு கருத்தரங்கில் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து சிறந்த விளையாட்டு வல்லுனர்கள் மற்றும் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் இருந்து உடற்கல்வியியல் அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பங்கேற்று கருத்தரங்கை வழங்க உள்ளனர். அதில் என்னுடைய முனைவர் பட்டம் தொடர்பான ஆய்வு கட்டுரையும் சமர்ப்பிக்க உள்ளேன். மேலும் தமிழகத்தில் சிறந்து விளங்கக்கூடிய விளையாட்டு வீரர்களையும் சிறப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, கேலோ இந்தியா, செஸ் ஒலிம்பியாட் போன்று இந்த கருத்தரங்கம் ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்று சிறப்பிக்கும் ஒன்றாக இருக்கும். இதனை விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளார் என்று கூறினார்.

---

பெரம்பலூர் மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா நினைவு தினம்!

## குன்னம் சி.இராஜேந்திரன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*பெரம்பலூர், பிப். 7 -*

*பெரம்பலூர் மாவட்டத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 55ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில், மாவட்டக் கழக அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.*

*வேப்பந்தட்டையில் அமைதி ஊர்வலம் சென்று, அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.*

*அதேபோல், கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.*

*இந்த நிகழ்ச்சிகளில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் ம.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றியப் பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன்,*

*பேரூர்ச் செயலாளர்கள் ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், துணை பெருந்தலைவர் எம்.ரெங்கராஜ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எ.ரசூல் அகமது, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணா. தொ.மு.ச. மாவட்ட தலைவர் கே.கே.எம்.குமார், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்டப் பிரதிநிதி எஸ்.அழகுவேல்,*

*வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா, வேப்பந்தட்டை மேற்கு பாண்டகப்பாடி கணேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.*

---

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை!

# புதுக்கோட்டையில் பேரறிஞர் அண்ணா நினைவு தினம்!

## கடலாடி வ.சத்தியமூர்த்தி - டாக்டர் வை.முத்துராஜா - கவிச்சுடர் கவிதைப்பித்தன் - த.சந்திரசேகரன் பங்கேற்பு!

*புதுக்கோட்டை, பிப்.7 -*

*பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 - வது நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட தி.மு.க. அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டுச் சென்று புதுக்கோட்டையில் அண்ணா சிலைக்கு வடக்கு மாவட்ட திமுக மற்றும் நகர கழக சார்பில் மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.*

*இந்நிகழ்வுகளில் முன்னாள் அமைச்சர் கடலாடி வ.சத்தியமூர்த்தி, கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா,*

*த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், கே.ஆர்.என்.போஸ், செ.அசோக்பாண்டியன். அரு.வீரமணி, சுப.சரவணன், பி.ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, ஆ.செந்தில், எம்.லியாகத் அலி, தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், ஆர்.சாமிநாதன், என்.சாத்தையா, சி.ஆர்.வி.சித்ரா, ஆர்.செல்லத்துரை, இராசு.சந்தோஷ், பி.அண்ணாதுரை, வை.கோ.ராஜன், எம்.எம்.பாலு, அ.ரெத்தினம், மழையூர் ராமசாமி, வே.ராஜேஸ்,*

*இராம.செல்வராஜ், ஆர்.பாலகிருஷ்ணன், சி.அரங்கநாயகம், வி. என்.எம்.பாலு, டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, கவிவேந்தன், செந்தாமரை பாலு, பொன்.பாரி, மு.இளஞ்சேரன், கே.எம்.கே.ரவிக்குமார், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின்ராஜா, டி.தயாளன், ஆ.மரிய எட்வின், மு.ராஜதுரை, மெஸ் மூர்த்தி, பி.கே.வெங்கடேசன், தெய்வானை, வெற்றிச்செல்வன், சுமோ பாலு, கி.சுப்பிரமணியன், எம்.கே.அறிவுடை நம்பி, டி. சுப்பிரமணியன், எஸ்.வி.ஆர்.ராஜா, பிரபு கேண்டீன் பன்னீர், ராயல் சபா, ஏ.எல்.கணேசன், டான்சி ராஜேந்திரன், தட்டாம்பட்டி ஆறுமுகம், தமிழ்ச் செல்வன், பழனிவேலு, மு.ராஜதுரை, வி.ஏ.டி.சி. ராஜேந்திரன், கனகம்மன் பாபு, காதர் கனி, பாரி, வடவாளம் க.செ.மணிமாறன், சந்திரசேகரன், ஆ. நாக ராஜன், பால்ராஜ், கண்மணி சுப்பு, இதயம் அப்துல்லா, சுந்தர்ராஜ், விஜயக்குமார், பிரேம் ஆனந்த். தியாகு, மா.மணிவேல், பா.ரெங்கராஜ், சித.ராஜா, அருண்குமார், ராமச்சந்திரன், செல்வம், க.செல்லையா, சந்திரசேகரன், சுதாகர், கலியமூர்த்தி,எழில்ராஜா, மாலையீடு பிரபு, ரபீக், முரளிதரன், மேட்டுப் பட்டி சின்னத்துரை, சேவியர், கே.எம்.எஸ்.குமார், சிவக்குமார், தங்கராசு சரவணன், மா.ரவி, டி.ஆர்.குமார், ராமலிங்கம், சி.எம்.ராமையா, நிஜாம் முகம்மது, உடையப்பன், அஞ்சான் சரத், மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*

---

மறு உத்தரவு வரும் வரை கூட்டத்தைக் கூட்டக் கூடாது!

# சண்டிகர் மேயர் தேர்தல்: ஜனநாயக கேலிக்கூத்து!

*புதுடெல்லி, பிப்.7-*

*சண்டிகர் மேயர் தேர்தலில் நடந்தது ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கும் சம்பவம் என உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.*

*அதோடு, ஜனநாயகத்தை படுகொலை செய்யும் செயலாகப் பார்ப்பதாக உச்சநீதிமன்றம் கருத்து கூறியுள்ளது.*

*சண்டிகர் மேயர் தேர்தல் ஜனவரி 30 ஆம் தேதி நடந்து முடிந்த நிலையில், அதில் சில குளறுபடிகள் நடந்திருப்பதாக ஆம் ஆத்மி கட்சி சார்பில் வழக்கு தொடரப்பட்டது.*

*இது தொடர்பான வழக்கை விசாரித்த இந்திய தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா மற்றும் மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய*



*அமர்வு, சில காட்டமான கருத்துகளைத் தெரிவித்துள்ளது.*

*அதில், "சண்டிகர் மேயர் தேர்தலில் நடந்தது ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கும் சம்பவம். ஜனநாயகத்தை படுகொலை செய்யும் செயலாகத்தான் இதனைப் பார்க்கிறோம். தேர்தல் நடத்தும் அதிகாரி சண்டிகர் தேர்தலில் வாக்குச் சீட்டுகளை சிதைத்துள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதை எங்களால் அனுமதிக்க முடியாது.*

## உச்சநீதிமன்றம் கடும் கண்டனம்!

*உச்ச நீதிமன்றம் அவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று தேர்தல் நடத்திய அதிகாரியிடம் சொல்லுங்கள். சண்டிகர் மேயர் தேர்தல் தொடர்பான அனைத்து வாக்குச் சீட்டுகள் மற்றும் வீடியோக்களை பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்ற பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும். வாக்குச் சீட்டுகளைச் சிதைத்த அதிகாரியை விசாரிக்க வேண்டும். மறு உத்தரவு வரும் வரை சண்டிகர் மேயர் மாநகராட்சி கூட்டத்தை கூட்டக் கூடாது" என்று தெரிவித்துள்ளது.*



பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவு தினத்தையொட்டி திருவாரூர் மாவட்ட கலக்கம் சார்பில் கொரடாச்சேரியில் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். ஒன்றியச் செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், பேரூர்ச் செயலாளர் பூண்டி கே.கலைவேந்தன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில்

# தலைவரின் சாதனைகளை மக்களிடத்தில் கொண்டுபோய் சேருங்கள்!

## கொக்கரக்கோ சௌமியன் இல்ல மணவிழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!




மயிலாடுதுறை மாவட்டக் கழக சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் – கழக எழுத்தாளர் வை.சௌமியன் அவர்களின் மகன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் – மயிலாடுதுறை நகர்மன்ற உறுப்பினர் சர்வோதயன் – தாட்சாயினி இணையரின் திருமணத்தை 'குறிஞ்சி' வளாகத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து வாழ்த்தினார். அமைச்சர் பெருமக்கள், கழக நிர்வாகிகள் உடனுள்ளனர்.

**சென்னை,பிப்.7-**

**மயிலாடுதுறை மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளரும், திராவிட இயக்க எழுத்தாளருமான கொக்கரக்கோ சௌமியன் இல்ல மணவிழாவை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் "நாடாளுமன்றத் தேர்தல் வர இருக்கின்றது. நம்முடைய தலைவரின் சாதனைகளை நீங்கள் மக்களிடம் கொண்டுபோய் சேருங்கள்" என்று வலியுறுத்தினார்.**

**மயிலாடுதுறை மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளரும் திராவிட இயக்க எழுத்தாளருமான கொக்கரக்கோ சௌமியனின் மகனும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளருமான சர்வோதயன் என்கிற பாலாஜி - தாட்சாயினி ஆகியோரின் திருமணத்தை கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிஞ்சி இல்லத்தில் நேற்று முன்தினம் நடத்தி வைத்தார்.**

அப்போது மணமக்களை வாழ்த்தி அவர் பேசியதாவது :-

"மயிலாடுதுறை மாவட்டச் சுற்றுசூழல் அணி அமைப்பாளர் சகோதரர் சௌமியன் அவர்களின் இல்லத் திருமண விழாவில், பங்குபெற்று மணமக்களை வாழ்த்துவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். சகோதரர் சர்வோதயன் சகோதரி தாட்சாயினி இருவரின் திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்க மயிலாடுதுறை செல்வதாக இருந்தது. ஆனால், இன்றைக்கு நம்முடைய குறிஞ்சி இல்லத்தில் இந்தத் திருமணம் சிறப்பாக நடைபெற்று இருக்கிறது.

ஏற்கனவே ஒப்புக்கொண்ட வேறு சில நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும் என்பதால், அந்தத் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் என்னால் கலந்துகொள்ள முடியவில்லை. ஆனால், அதை நான் சொன்னதும், புரிந்துகொண்டு நீங்கள் மயிலாடுதுறை வரவில்லை என்றாலும் பரவாயில்லை, நாங்கள் உங்கள் வீட்டுக்கு வந்து விடுகிறோம் என்று சொல்லி இன்றைக்கு மிகச் சிறப்பாக மகிழ்ச்சியோடு நம்முடைய வீட்டுத் திருமணம் இங்கு நடந்திருக்கிறது.

### கழக உணர்வுள்ள குடும்பம்!

பொதுவாக திருமண நிகழ்ச்சிகளில் திருமண வீட்டார்களைச் சேர்ந்தவர்கள் வருக வருக என அனைவரையும் வரவேற்பார்கள். இது நம் வீட்டில் நடைபெறுகின்ற திருமணம். அதனால் இங்கு வந்திருக்கின்ற உங்கள் அத்தனை பேரையும் நம் வீட்டுக்கு வருக வருக என்று நான் வரவேற்கின்றேன். சகோதரர் சௌமியனாக இருக்கட்டும், சர்வோதயனாக இருக்கட்டும் அவர்களுடைய குடும்பமே கழகக் குடும்பம், கழக உணர்வுள்ள குடும்பம்.

### அண்ணாவின் முதல் சிறுகதை!

சௌமியனுடைய தந்தையார் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் தொடக்கக் கால செயல்வீரர். சௌமியனைப் பொறுத்தவரை, சோசியல் மீடியாவில் எங்கள் எல்லோருக்கும் முன்னோடி. பிளாக்கில் எழுதியவர். சௌமியனின் குடும்பம் எந்தளவிற்கு கழக உணர்வுள்ள குடும்பம் என்பதைச் சொல்ல விருப்பப்படுகின்றேன்.

சௌமியன் என்ற பெயரே மிகவும் வித்தியாசமான ஒரு பெயர்தான். ஆனால் அந்தப் பெயரை அவருக்குச் சூட்டியவர் யார் என்றால், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். சௌமியன் என்ற அந்தப் பெயருக்குச் சொந்தக்காரர் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா அவர்களின் புனைப்பெயர்தான் சௌமியன். அண்ணாவின் முதல் சிறுகதை `ஆனந்த விகட'னில் வெளியானது. அந்தச் சிறுகதையின் பெயர் 'கொக்கரக்கோ'. அந்தக் கதையை சௌமியன் என்ற புனைப் பெயரில் எழுதியவர்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இங்கு இருக்கின்ற சௌமியன் அவர்கள் பின்னாளில் சௌமியன் என்ற பெயரில் `கொக்கரக்கோ' என்ற வலைத்தளத்தை நடத்தினார். குறிப்பாக, 2009-2011 ஆம் ஆண்டு காலகட்டத்தில் அப்போது நாங்கள் சோசியல் மீடியாவில் இல்லை. எங்களுக்கெல்லாம் முன்னோடியாக முன்னால் போனவர்தான் சௌமியன். அப்பொழுது நம் தலைவர் மேல், கலைஞர் மேல் யாராவது அவதூறு பரப்பினால் அதற்கெல்லாம் தன்னுடைய பிளாக்கில் தக்க பதிலடி கொடுத்தவர்தான் சௌமியன்.

### களத்திலும் மக்களைச் சந்திப்பார்!

குறிப்பாக, நம்முடைய தலைவர் மீதும் என் மீதும் தனிப் பாசம் கொண்டவர். சிலர் பத்திரிகையில், சோசியல் மீடியாவில் எழுதுவார்கள். இன்னும் சிலர் களத்தில் மக்களைச் சந்திப்பார்கள். ஆனால், இந்த இரண்டையும் சரிசமமாகச் சிறப்பாகச் செய்கின்றவர்தான் சௌமியன் அவர்கள். சோசியல் மீடியாவிலும் சிறப்பாகச் செயல்படுவார், களத்திலும் மக்களைச் சந்திப்பார்.

கழக ஆட்சி அமைந்தபோது 2021 ஆம் ஆண்டு கொரோனா பேரலை, லாக்டவுன். அப்பொழுது சௌமியன் அவர்கள் தன்னுடைய நிறுவனத்தின் சார்பாகத் தயாரித்த 500 சத்துமாவு பாக்கெட்டுகளை எனக்கு அனுப்பி வைத்தார். `தொகுதி முழுக்கக் கொடுங்கள், இது மிக மிகத் தேவை' என்று சொன்னார். முதலில் 500 பாக்கெட்டுகள்தான் கொடுத்தார். 'இது எப்படிப் போதுமானதாக இருக்கும். மக்கள் இன்னும் அதிகமாக எதிர்பார்ப்பார்கள்' என்று சொன்னேன்.

'நான் அடுத்த 10 மாதத்திற்குத் தருகிறேன்' என்று சொல்லி கிட்டத்தட்ட 5,000 பாக்கெட்டுகளை அடுத்த 10 மாதங்களுக்கும் கோவிட் லாக்டவுன் காலம் முடிகின்ற வரைக்கும் கொடுத்தார். அந்த நேரத்தில் நான் தனிப்பட்ட முறையில் நன்றி சொல்லவில்லை. இந்த மேடையை அவருக்கு நன்றி சொல்ல பயன்படுத்திக் கொள்கின்றேன்.

சௌமியனின் வழியில் இன்றைக்கு அவருடைய மகன் அருமைச் சகோதரர் சர்வோதயன் அவர்களும் கழகப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார். மயிலாடுதுறையில் நகராட்சி மன்ற உறுப்பினராக இன்றைக்கு மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றார். அவருக்கு என்னுடைய வாழ்த்துகள்.

### 25 வருடங்களுக்குப் பிறகு வெற்றி!

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மயிலாடுதுறையில் அவருடைய வார்டில் 25 வருடங்களுக்குப் பிறகு நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் சௌமியன் அவர்களும், சர்வோதயன் அவர்களும்தான். எதிர்த்துப் போட்டியிட்ட அத்தனை வேட்பாளர்களுக்கும் டெபாசிட் போனது என்றால், அதிலேயே அவருக்கு மக்களிடத்தில் இருக்கக்கூடிய செல்வாக்கு, மக்கள் பணியில் அவர் காட்டக்கூடிய வேகம் தெளிவாகத் தெரிகின்றது.

சர்வோதயன் மிகுந்த சமூக அக்கறை உள்ளவர். தங்கை அனிதா நீட் தேர்வால் உயிரிழந்த போது, தான் படித்த ஏ.வி.சி கல்லூரியில் ஒட்டு மொத்த மாணவர்களையும் திரட்டி ஒரு மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுத்தவர்தான் தம்பி சர்வோதயன். தொடர்ந்து கழகப் பணிகளில் ஈடுபட்டு கழகத்திற்காக உழைத்து வருகிறார்.

அவருடைய உழைப்புக்கு ஓர் அங்கீகாரமாகத்தான் அவரை இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளராகப் பொறுப்பு கொடுத்து இருக்கின்றோம். அந்தப் பொறுப்பையும் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார். இல்லற வாழ்வில் அடியெடுத்து வைக்கக்கூடிய தம்பி சர்வோதயன் சகோதரி தாட்சாயினிக்கு என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய கழகத் தலைவர் உலக முதலீட்டாளர்களை சந்திப்பதற்காக ஸ்பெயின் நாட்டில் இருக்கிறார். இரண்டு நாட்களில் சென்னைக்கு வருகிறார். நேற்று நள்ளிரவு ஒரு மணி தலைவர் அவர்கள் என்னை தொலைபேசியில் அழைத்தார். அங்கும் இங்கும் ஐந்து மணி நேரம் வித்தியாசம். அவர்களுக்கு அங்கே மாலை ஏழரை மணி.

### தலைவர் கேட்ட முதல் கேள்வி!

தலைவர் அவர்களும் என்னுடைய அம்மா அவர்களும் பேசினார்கள். தலைவர் கேட்ட முதல் கேள்வி, 'நாளை காலை சௌமியன் வீட்டுக் கல்யாணம் இருக்கிறது.அதை நீ நடத்தி வைக்க வேண்டும். மறந்து விடாதே' என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு எங்கிருந்தாலும் நம்முடைய தலைவர் அவர்கள் நம்முடைய சௌமியன் வீட்டுத் திருமணம் மிகச் சிறப்பாக நடக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் இருந்திருக்கிறார்கள். இங்கே இருந்திருந்தால் அவர்கள் நேரில் வாழ்த்தியிருப்பார்கள். அங்கிருந்தாலும் அவர்கள் வாழ்த்தி கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வந்த பிறகு, கண்டிப்பாக மணமக்களைச் சந்தித்து அவர்களின் வாழ்த்துகளைத் தெரிவிப்பார்கள்.

மணமக்கள் இருவரும் நன்கு படித்தவர்கள். மணமகன் இளைஞர் அணித் துணை அமைப்பாளர். அதிக அட்வைஸ் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. இன்னும் சொல்லப் போனால் எனக்கு அட்வைஸ் சொல்கிறவர்தான் அண்ணன் சௌமியன் அவர்கள். அந்த அளவிற்குக் கழகப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவர்.

இங்கு வந்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாடாளுமன்றத் தேர்தல் வர இருக்கின்றது. நம்முடைய தலைவர் ஆற்றி இருக்கக்கூடிய சாதனைகளை நீங்கள் மக்களிடம் கொண்டு போய்ச் சேருங்கள். மணமகன் மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர். திருமணமானாலும் தேர்தல் பணிகளில் அடுத்த இரண்டு மாதத்திற்கு நீங்கள் ஈடுபட வேண்டும் என்பதைக் கேட்டுக்கொண்டு, உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்தத் திருமண விழாவில், கழகத்தின் முதன்மைச் செயலாளரும் அமைச்சருமான கே.என்.நேரு, அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மெய்யநாதன், மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா முருகன், மயிலாடுதுறை நகரச் செயலாளர் குண்டாமணி, மாணவர் அணித் தலைவர் ராஜீவ் காந்தி, கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் இளையராஜா, பிரகாஷ், மருத்துவர் ராஜாமூர்த்தி மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ராம இளங்கோவன், ஒன்றியச் செயலாளர் முருகமணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மருது என்கிற மருதமுத்து உள்ளிட்ட மயிலாடுதுறை மாவட்டக் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



சேலம் மாநகர தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில், கலைஞரின் நூற்றாண்டு விழா, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு, மாநில மற்றும் மாவட்ட அளவிலான கூடைப்பந்து போட்டி,சேலம் காந்தி ஸ்டேடியத்தில் கடந்த 4 நாட்களாக நடந்து வந்தது. இதில் மாநில அளவிலான ஆண்கள் போட்டியில் 16 அணிகளும், மாவட்ட அளவிலானபெண்கள் அணியில் 6அணிகளும் கலந்து கொண்டன. இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு வழங்கும் விழாநடந்தது. சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர், இரா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு போட்டிக்கான ஏற்பாடுகளை தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஆனந்த கண்ணன்,துணை அமைப்பாளர்கள் டாக்டர் செங்கமலை, மோகன்குமார், நாகராஜ் மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர். இந்த நிகழ்ச்சியில் கவுன்சிலர்கள் குமரவேல், முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் செவ்வை அன்புக்கரசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## 'வாட்ஸ் அப்' பில் வைரலாக வலம் வருவது!

# பா.ஜ.க.வுக்குக் கிடைத்த பளார்... பளார்...

**(வலைதளங்களில் வைரலாக வலம் வரும் ஆடியோ ஒன்று... பா.ஜ.க. ஐ.டி.செல்லில் பணிபுரியும் பெண் ஒருவர், நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு வாக்கு சேகரிக்க, சாமான்யர் ஒருவருடன் தொலைபேசியில் உரையாடுகிறார். அந்த உரையாடல் இதோ ;)**

**கேள்வி:** சார் வணக்கம். நான் மகேஸ்வரி. மாநில பி.ஜே.பி. ஆபிசில் இருந்து பேசுகிறேன். நீங்கள் சார்!

**பதில்:** நான் அர்ஜுனன்.

**கேள்வி:** பிரதமரின் 'உஜ்வாலா' திட்டத்தின் கீழ் மானிய விலையில் எரிவாயு வாங்கி பயன்படுத்தி இருக்கீங்களா சார்?

**பதில்:** ஆமாங்க, 350 ரூபாய் விற்ற எரிவாயுவை இப்போது 950 ரூபாய்க்கு வாங்குறோம்.

**கேள்வி:** மானியம் வருதுங்களா சார்?

**பதில்:** மானியம் வந்து கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் ஆகிறது. மானியமும் வரலை. காஸ் (Gas) விலையும் 950, 1000 ரூபாய் ஆகிவிட்டது. 300 ரூபாய் விற்றுக் கொண்டிருந்த காஸ் அது.

**கேள்வி:** வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு வாக்களிப்பீர்களா சார்?

**பதில்:** நானும் ஓட்டுப்போட மாட்டேன். என்னால் முடிந்தால், ஒரு 100 ஓட்டு போடாததற்கு உண்டான வேலையைப் பார்ப்பேன். எங்கே நீங்க கேட்ட கேள்வியை திருப்பிக் கேளுங்க...!

**கேள்வி:** பா.ஜ.க.வுக்கு ஓட்டுப்போடுவீங்களான்னு கேட்கிறேன் சார்.

**பதில்:** பா.ஜ.க.வுக்கு முட்டாள் பையன்தாங்க ஓட்டுப்போடுவான்.

**கேள்வி:** அரசாங்கத்திடமிருந்து உங்கள் எதிர்பார்ப்பு என்ன என்பதைக் கூறுங்கள் சார்! பாரதிய ஜனதா கட்சி உங்கள் நம்பிக்கையைப் பெற கடினமா உழைக்கும் சார்.

**பதில்:** அப்படிங்களா... பாரதிய ஜனதா கட்சி இப்போது உழைத்துக் கொண்டிருப்பதே போதும். நாட்டு மக்கள் எல்லாம் செழிப்பா இருக்காங்க,(?) சந்தோஷமா இருக்கிறாங்க.(?) 60 ரூபாய் விற்ற




பெட்ரோல் 110 ரூபாய் விற்கிறது. மகிழ்ச்சி. 350 ரூபாய் விற்ற காஸ் (Gas) 980 ரூபாய், 1000 ரூபாய் விற்கிறது. மகிழ்ச்சி.

650 ரூபாய் விற்ற அரிசி மூட்டை 1500 ரூபாய் விற்கிறது. மகிழ்ச்சி. 100 ரூபாய் விற்ற எண்ணெய், 250 ரூபாய் விற்கிறது. 250 ரூபாய் விற்ற எண்ணெய், 750 ரூபாய் விற்கிறது. அப்புறம் சொல்லுங்க மேடம். வேறு ஏதாவது கேளுங்க.

**கேள்வி:** உங்களது சட்டமன்றத் தொகுதி எது?

**பதில்:** செய்யூர் சட்டமன்றத் தொகுதி. பி.ஜே.பி.யைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க மேடம்?

**கேள்வி:** சார், நான் பி.ஜே.பி.யில் வேலை செய்கிறேன். வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை வெற்றி பெறச் செய்ய, மோடிஜியை வலுப்படுத்த, தாமரைச் சின்னத்தில் ஓட்டுப்போடுங்க சார்.

**பதில்:** நீங்கள் ஓட்டுப் போட்டாலும், நான் ஓட்டுப் போட்டாலும் - அதானி, அம்பானி, அதானி புள்ளை, அம்பானி புள்ளை, அதானி பேரன், அம்பானி பேரன் - எத்தனையோ ஆயிரம் கோடி திருடிக்கொண்டு ஓடினாங்க பாருங்க... அவங்க குடும்பமெல்லாம் தான் நல்லாயிருக்கும்.

நீயும், நானும் கடைசி வரை ஓட்டுப்போட்டுக் கொண்டுதான் இருக்கணும். சரிங்களா...? உங்கள் பையன் அரிசி வாங்கும்போது ஒரு மூட்டை அரிசி 5000 ரூபாய் விற்கும். பெட்ரோல் 500 ரூபாய் விற்கும். ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். எனவே தயவு செய்து பி.ஜே.பி.க்கு ஓட்டு மட்டும் போட்றாதீங்க...

**பெண்மணி :** ஓ.கே.சார். நன்றிங்க சார்.



மயிலாடுதுறை மாவட்டம் தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடைபெற்ற 2வது புத்தகத் திருவிழாவை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் ஆகியோர் திறந்து வைத்து தொடங்கி வைத்தனர். உடன் கூடுதல் ஆட்சிய தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழகத் துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஏ.ஆர்.ராஜா, வைத்தியநாதன், ஞான.இமையநாதன், மங்கை எம்.சங்கர், மூவலூர் மூர்த்தி, ப.முருகமணி, ஞான. இமையநாதன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் குழுத் தலைவர்கள் காமாட்சி மூர்த்தி, கமல ஜோதி தேவேந்திரன், மகேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவ தி பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், பொன்னமராவதி புதுக்கோட்டை புதிய வழித்தடப் பேருந்து சேவையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி (03.02.2024) அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தெய்வநாயகி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.சுதா அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் திருமதி.சுந்தரி அழகப்பன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக புதுக்கோட்டை மண்டல பொதுமேலாளர் இரா.இளங் கோவன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

ரூ.5.40 கோடி மதிப்பிலான

# நீலகிரி மாவட்டத்தில் முடிவுற்ற - நடைபெற்று வரும் பணிகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு செய்த பின் பேட்டி!



நீலகிரி, பிப். 7 -

நீலகிரி மாவட்டத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ரூ.79.34 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற வளர்ச்சித்திட்டப்பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், கூக்கல், கக்குச்சி மற்றும் எப்பநாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.79.34 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் கா.ராமச்சந்திரன், உதகை ஊராட்சி ஒன்றியம், கூக்கல் ஊராட்சி, உயிலட்டியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு கட்டடத்தினையும், கக்குச்சி ஊராட்சியில், நமக்கு நாமே திட்டத்தின்கீழ், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமையற் கூடத்தினையும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அஜ்ஜ{ர் பகுதியில் ரூ.17.97 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மைய கட்டடத்தினையும், நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.24.11 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாய நலக்கூடத்தினையும், எப்பநாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அஜ்ஜார் பகுதியில் ரூ.17.26 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி மைய கட்டடத்தினையும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுநிதியிலிருந்து இடுஹட்டியில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு கட்டடத்தினையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் அவர்கள், உதகை ஊராட்சி ஒன்றியம், கூக்கல் ஊராட்சியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.1.01 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பெட்டலடா முதல் பால்மரா வரை சாலைப் பணியினையும், ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மசக்கல் முதல் நரிகுடமந்து வரை சாலைப் பணியினையும்,

எப்பநாடு ஊராட்சி ஒன்றிய பள்ளியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.8.63 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கழிப்பிடங்களையும், மரக்கல் பகுதியில் 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின்கீழ் ரூ.5.20 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியினையும் தரத்தினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள், கூக்கல் ஊராட்சிக் குட்பட்ட மசக்கல் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூடத்தின் தடுப்புச் சுவர் பணியினையும், நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கூக்கல் பகுதியில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மைய கட்டடத்தினையும், திருச்சிக்கடி பகுதியில் பழங்குடியினர்களுக்கான குடியிருப்பு திட்டத்தின்கீழ் தலா ரூ.4.95 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 28 குடியிருப்பு கட்டுமான பணிகளையும், துனேரி ஊராட்சிக்குட்பட்ட அணிக்கொரை பகுதியில் 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின்கீழ் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய துணை சுகாதார மைய கட்டடத்தின் கட்டுமான பணியினையும் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, பொதுமக்களின் அடிப்படை வசதிகளை முன்னுரிமை அளித்து மேற்கொள்ள அறிவுறுத்தியதை தொடர்ந்து, நமது மாவட்டத்தில் நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வளர்ச்சித்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நடைபெற்று வரும் பணிகள் தரமாக உள்ளதா என்பதும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம் உதகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூக்கல், எப்பநாடு மற்றும் கக்குச்சி ஆகிய ஊராட்சி பகுதிகளில் பல்வேறு முடிக்கப்பட்ட பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தும், நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் தரமாக மேற்கொள்ளப்படுகிறதா என்பதை கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு முத லமைச்சர் முதலமைச்சராக பொறுப்பேற்றபிறகு ஊராட்சிகளில் பல்வேறு பணிகள் மேற்கொள்ள அதிகபடியான நிதி ஒதுக்கீடு செய்து வருகிறார்கள். அதனடிப்படையில், உதகை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூக்கல் ஊராட்சிக்கு மட்டும் கடந்த 2½ ஆண்டுகளில் ரூ.5.14 கோடி மதிப்பீட்டிலான வளர்ச்சித்திட்டப்பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல், கக்குச்சி ஊராட்சிக்கு ரூ.13.49 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் மேற்கொள்ளவும், எப்பநாடு ஊராட்சியில் கிராம சுகாதார இயக்கம், மாவட்ட ஊராட்சி பொதுநிதி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.4.43 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை மேற்கொள்ளவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. சில பணிகளும் முடியும் தருவாயில் நடைபெற்று வருகிறது. இதனையும் விரைவாக முடித்திட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் உள்ள பொதுமக்களுக்கு இது போன்ற பணிகள் மூலம் அவர்களின் தேவைகளான அனைத்து அடிப்படை வசதிகளும் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு நிறைவேற்றி தந்து வருகிறது. எனவே பொதுமக்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டங்களை பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் செல்வகுமார், உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ், உதகை ஊராட்சி ஒன்றியத்தலைவர் மாயன் (எ) மாதன், உதவிப் பொறியாளர் ராஜ்குமார், உதகை வட்டார வளர்ச்சி அலுவலர் நந்தகுமார், ஊராட்சித்தலைவர்கள் பழனிசாமி (கூக்கல்), திருமதி.உமாதேவி (தூனேரி) உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்ட தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வேதாரண்யம் ஆயக்கரன்புலம் ஆர்.வி.எஸ். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற திறனறிவுத் தேர்வில் வெற்றிப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் பரிசு மற்றும் சான்றிதழ்களை நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலை வருமான என்.கௌதமன், தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் ஆகியோர் வழங்கினார்கள். உடன் தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அ.பாரிபாலன், அரவிந்த், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் சோ.ரவிச்சந்திரன், வேதாரண்யம் நகரக் கழகச் செயலாளர் மா.மீ.புக ழேந்தி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் உதயம் வே.முருகையன், என்.சதாசிவம், மகா.குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.துரைராஜ் மற்றும் பலர் உள்ளனர்.



கும்பகோணம் முதல் வட்டக் கழக செயலாளராகவும், குடந்தையின் முதல் நகரக் கழக செயலாளரா கவும் பணியாற்றி மறைந்த, மிசா.சு.பத்மநாபன் அவர்களின் 35வது நினைவு தினத்தை முன்னிட்டு கும்பகோணம் மாநகர தி.மு.கழகம் சார்பில் அமைதி ஊர்வலம் சென்று அவரது நினைவிடத்தில் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தி 300 பயனாளிகளுக்கு உணவு, வேட்டி, புடவைகள் வழங் கப்பட்டது. இந்நிகழ்வில் செ.இராமலிங்கம் எம்.பி, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழி யன், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் கல்யாணம், கும்பகோணம் மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், கோ.க.அண்ணாதுரை, என்.நாசர், ஜெ.சுதாகர், இர.உதயசந்திரன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

மாநில உரிமைகள் காத்திடஒன்றிய பா.ஜ.க.அரசைக் கண்டித்து

# மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம்!

## கழகத்தினருக்கு கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!



கோவை, பிப்.7-

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மாநில உரிமைகள் காத்திட ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாளை(8.2.2024-வியாழக்கிழமை) மாலை 5மணியளவில்,

கோவை சிவானந்தா காலனி,பவர் ஹவுஸ் முன்புறம் நடைபெறும் “கண்டன ஆர்ப்பாட்டத்தில்”

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க,

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க.விற்கு உட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், மேயர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், வட்டக்கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புக்கள்,கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள்,BLA2 பாக முகவர்கள்,பூத் கமிட்டி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாகக் கலந்து கொண்டு,

ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு எதிராக கண்டனக் குரலை எழுப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# அரியலூர் மாவட்டத்தில் புதிய பேருந்து வழித்தடம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்

அரியலூர், பிப்.7-

அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சியில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம், மெய்யனூர் கிளை சார்பில் புதிய பேருந்து வழித்தடத்தினை தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப நகரங்கள் முதல் கிராமங்கள் வரை பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் இன்றைய தினம் பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப செந்துறை முதல் சேலம் வரை புதிய பேருந்து வழித் தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதன்படி சேலம் திட்டக்குடி (வழி) ஆத்தூர், வேப்பூர், தொழுதூர் வரை பேருந்து இயக்கப்பட்டு வந்தது. தற்போது அரசுப்பேருந்து தடம் எண் 132யுஇ திட்டக்குடி செந்துறை (வழி) வசிஷ்டபுரம், குழுமூர், ஜெயங்கொண்டம் பிரிவு (வழித்தடம் நீளம் 24 கி.மீ) நீட்டிப்பு செய்யப்பட்டு இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து சேலத்திலிருந்து செந்துறைக்கு காலை 4.26 மணிக்கு புறப்படும். அதேபோன்று காலை 9.35 மணிக்கு செந்துறையிலிருந்து ஆத்தூருக்கு புறப்படும். இந்த புறநகர் பேருந்து வழித்தடம் நீட்டிப்பால் வசிஷ்டபுரம், குழுமூர், ஜெயங்கொண்டம் பிரிவு பகுதி பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் ஊர் பொதுமக்களுக்கு சேலத்திலிருந்து செந்துறைக்கு நேரடி பேருந்து வசதி கிடைக்கப்பெற்று பயனடைவார்கள். எனவே, இப்பேருந்து வசதியினை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மேலாண் இயக்குநர் (சேலம்) பொன்முடி, துணை மேலாளர் வணிகம் சேலம் பாண்டியன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்காதாரணி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, ஒன்றிய கழக செயலாளர்கள் பூ. செல்வராஜ், வி.எழில் மாறன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயி கதிரவன், அன்பழகன், சேகர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள், தொழிற் சங்கத்தினர் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் அணி அமைப்பாளர் டி.எம்.ஆர்.ராமமூர்த்தி ஏற்பாட்டில் புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம் வடவாளம் ஊராட்சி செட்டியாப்பட்டியில் பொது மக்களுக்கு 1000 தென்னக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட கழக செயலாளர் வழக்கறி ஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் வழங்கப்பட்டது. நிகழ்வில் கழக விவசாயத் தொழிலாளர் அணி துணை தலைவர் த.சந்திரசேகர், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.எஸ். கருப்பையா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீரை.தமிழ்ராஜா, மாவட்ட ஊராட்சி குழு தலை வர் ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், ஒன்றிய செயலாளர்கள் முக.ராமகிருஷ்ணன், ஆர்.ஆர். சாமிநாதன் மாவட்ட அணிகளின் அமைப்பாளர் எம்.எம்.பாலு, வி. என்.எம்.பாலமுருகன், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் கே.பி.எஸ்.மகேந்திரன், தட்டாம்பட்டி கருப்பையா, கவிமாறன் ஆர்.கோபால், சரவணன், கணேசன், கலியமுத்து, ஆர்.முருகேசன், லாசர், மேலவிடுதி ஆறுமுகம், டி.எம்.ஆர். முத்துக்குமார், கோவில்பட்டி சக்தி, இதயம் அப்துல்லா, கே.டி.எம்.மணிகண்டன், எழில் ராஜா, ஏ.எஸ்.கருணாநிதி, கரு.மாரிமுத்து, சுப்பிரமணியன், முள்ளூர் நாகராஜன், க.செ.கலியமூர்த்தி, பழ.கருப்பையா, உருமராஜ், எஸ்.சுதாகர், கே.மாரிமுத்து மற்றும் கிளை கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.




உதகை நகர தி.மு.க. சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு உதகை நகரக் கழகச் செயலாளர் எஸ்.ஜார்ஜ் தலைமையிலும் ஏற்பாட்டின் பேரிலும் நஞ்சநாடு முதியோர் இல்லத்தில் உள்ளவர்களை திருச்சி, தஞ்சாவூர், கன்னியாகுமரி மற்றும் பல இடங்களுக்கு சுற்றுலா செல்ல கொடியசைத்து வழி அனுப்பி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மோகன் குமார், கார்டன் கிருஷ்ணன், ஜெயகோபி, செல்வராஜ், கீதா, நாகமணி, வனிதா, பிரியா, மேரி புளோரினா, மஞ்சுகுமார், சுரேஷ், செந்தில், சிவகுமார், அன்வர் பாட்ஷா, கமலக்கண்ணன், ஹென்றி, அமல்ராஜ், நாதன், டிடோன் பிரகாஷ் செந்தில், செல்வராஜ், ஜெயவேலு, மகேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## புதுடெல்லி - குடியரசு தின விழாவில் பங்கேற்க அடுத்த ஆண்டு விமானத்தில் அழைத்துச் செல்லப்படுவர்!

# என்.சி.சி., ஒழுக்கம் - காலம் தவறாமை - பொறுப்புணர்வை இளையோர் மனதில் விதைக்கிறது!

## புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்த

## என்.சி.சி. மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமித உரை!

சென்னை, பிப். 7–

**குடியரசு தின விழாவில் பங்கேற்றிட என்.சி.சி. மாணவ – மாணவியர் விமானத்தில் அழைத்துச் செல்லப்படுவார்கள் என்றும், ஒழுக்கம், காலம் தவறாமை, பொறுப்புணர்வை இளையோர் மனதில் விதைக்க என்.சி.சி. உதவுகிறது என்று என்.சி.சி. மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

குடியரசு தின அணிவகுப்பில் கலந்துகொண்டு ஒன்றிய அளவில் மூன்றாம் இடம் பிடித்து தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ள என்.சி.சி. மாணவ-மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்ச்சி சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

“குடியரசு தின அணிவகுப்பில் வென்று வந்துள்ள நமது என்.சி.சி. மாணவர்களைச் சிறப்பிக்கும் இந்த நிகழ்வில் நான் கலந்துகொள்வதில் பெருமிதம் கொள்கிறேன். இந்த வாய்ப்பை எனக்குத் தந்த நமது முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### என்.சி.சி.யில் சேரவில்லை நாட்டு நலப் பணியில் சேர்ந்துவிட்டேன்!

நான் பள்ளியில் படிக்கும்போது என்.சி.சி.யில் சேர விரும்பினேன். ஆனால் நான் தேர்வாகவில்லை. அதனால் நான் என்.எஸ்.எஸ். (நாட்டு நலப்பணித் திட்டம்) அமைப்பில் சேர்ந்துவிட்டேன்.

சில நாட்களுக்கு முன்பு குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற என்.எஸ்.எஸ் மாணவர்களை நம்முடைய இல்லத்தில் சந்தித்து அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டேன். இன்றைக்கு என்.சி.சி மாணவர்கள் உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன். என்.எஸ்.எஸ் ஆனாலும் சரி, என்.சி.சி ஆனாலும் சரி எப்பொழுதுமே உங்களுடன் இணைந்து பயணிப்பேன் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த முறை இதே அரங்கில், கடந்த ஆண்டு என்.சி.சி மாணவர்களுக்கான பாராட்டு விழா இதே கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. அப்போது நீங்கள் ஒரு கோரிக்கையை வைத்திருந்தீர்கள். குடியரசு நாள் அணிவகுப்புக்காக டெல்லிக்கு ரயிலில் சென்று வந்து கொண்டிருக்கிறீர்கள். ஒருநாள் நிகழ்ச்சிக்காக ஆறு நாள் பயணம் செய்ய வேண்டியதாக இருக்கிறது என்று ஒரு கோரிக்கை வைத்தீர்கள்.

### விமானத்தில் அழைத்துச் செல்லப்படுவார்கள்!

விமானத்தில் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற உங்களின் கோரிக்கையை, ‘உடனே நிறைவேற்றித் தருகிறோம்’ என்று அந்த நிகழ்ச்சியில் நான் பேசும்போது அறிவித்தேன். சட்டப்பேரவையிலும் அதற்கான அறிவிப்பையும் வெளியிட்டோம். அதற்கான ஆணையும் வெளியாகி அதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்தோம். எனினும் ஒரு சில தவிர்க்க முடியாத காரணங்களால் உங்களால் இந்த ஆண்டு விமானத்தில் செல்ல முடியவில்லை.

என்.எஸ்.எஸ்-ஐச் சேர்ந்த 13 மாணவர்களும் விமானத்தில் தான் டெல்லிக்குச் சென்று குடியரசு அணிவகுப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று வந்தார்கள். வருகின்ற ஆண்டு நடைபெற உள்ள குடியரசு தின அணிவகுப்புக்கு நிச்சயம் நீங்கள் விமானத்தில் சென்று வருவதற்கான ஏற்பாட்டை நாங்கள் மேற்கொள்வோம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய தேசிய மாணவர் படை வியக்கத்தக்க சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். நடந்து முடிந்த குடியரசு தின அணிவகுப்பில் தனிப்பட்ட சாதனைகளுடன் குழுவாக அவர்கள் மூன்றாம் இடத்தை பிடித்திருக்கிறார்கள்.

டெல்லியில் நடந்த அகில இந்தியப் போட்டிகளில் நமது மாநிலத்தை சேர்ந்த 117 தேசிய மாணவப் படையினர் கலந்து கொண்டனர். இராணுவ படை பிரிவில் அம்ரில் மில்ட் எனும் மாணவர் தங்க பதக்கம் வென்றார். மஞ்சுஸ்ரி எனும் மாணவி விமானப் படை பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்றார். ஷகிரா நௌசத் எனும் மாணவி குதிரைப்பந்தயம் சார்ந்த போட்டிகளில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

நிதி ரீதியாகவும், உள் கட்டமைப்பு ரீதியாகவும் தேசிய மாணவர் படைக்கு மிகுந்த ஆதரவு அளித்து வரும் முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முகாம்கள் நடத்துவதற்கான நிதி வசதி, கட்டுமானப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் இளைஞர் மேம்பாட்டுக்கு தமிழ்நாடு அரசு கொடுத்துவரும் ஆதரவு வெளிப்படுகிறது.

### நிதியை உயர்த்தி வழங்கும் அரசு!

குடியரசு தின முகாம் மற்றும் ஒன்றிய அரசு நடத்தும் முகாம்களுக்கான நிதியை ஆண்டுக்கு ரூ.60 இலட்சம் என்பதிலிருந்து ரூ.1 கோடியாக தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது. மேலும் முதலமைச்சர் பேரணி தொடர்பான நிகழ்ச்சிகள் மற்றும் குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொண்டு திரும்பிய மாணவர்களுக்கு அளிக்கப்படும் பாராட்டு விழாக்களுக்கு அளிக்கப்படும் நிதியானது ஆண்டுக்கு ரூ.5 லட்சத்திலிருந்து ரூ.6 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்தகைய நிதி உதவிகளின் மூலம் நமது என்.சி.சி மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு எந்தளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை தெரிந்து கொள்ளலாம். இதுபோன்ற ஆதரவுகள் நமது மாநிலத்தின் என்.சி.சி-யின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் உதவியாக இருக்கும்.

என்.சி.சி மாணவர்களின் துப்பாக்கி சுடும் பயிற்சிகளுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்காக வழங்கப்பட்டு வந்த தொகை ரூ.1 இலட்சத்து 74 ஆயிரம் என்பதிலிருந்து ரூ.4 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆண்டு முழுவதும் நம்முடைய என்.சி.சி மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் பல்வேறு விருதுகளை வென்று வந்துள்ளார்கள். தமிழ்நாடு அரசு அந்த மாணவர்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் ஈடுபாட்டை எடுத்துகாட்டுவதாக இந்த சாதனைகள் அமைந்துள்ளன.

### வெள்ளப் பாதிப்பில் அரசுக்கு துணையாக நின்றவர்கள்!

இந்த நேரத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். கடந்த டிசம்பர் மாதம் கடும் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு தமிழ்நாட்டில் பல இடங்களில் ஏற்பட்டது. மிக்ஜாம் புயலால் சென்னையில் கனமழை பெய்து மிகப் பெரிய ஒரு சேதம் ஏற்பட்டது. அதேபோல் தென் மாவட்டங்களில் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் மிகப்பெரிய அளவில் கனமழை பெய்தது. அப்பொழுது வெள்ள மீட்புப் பணிகளில் அரசுக்கு பெரும் துணையாக நின்றவர்கள் நம்முடைய என்.சி.சி மாணவர்கள்தான். அவர்களுக்கு அரசின் சார்பாக அன்பையும் வாழ்த்தையும் நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம். ஏனென்றால் உயிரைப் பணயம் வைத்து வெள்ள நீருக்குள் நீந்திச் சென்று அங்கிருந்த பொதுமக்களின் உயிரை காப்பாற்றியது என்.சி.சி மாணவர்களாகிய நீங்கள்தான்.

திருநெல்வேலி வெள்ளத்தின்போது, தனது அசாத்தியமான துணிச்சலை வெளிப்படுத்தி பல உயிர்களைக் காப்பாற்றிய நமது என்.சி.சி. மாணவர் டேனியல் செல்வ சிங் அவர்களின் பணியை நான் கட்டாயம் குறிப்பிட்டே ஆக வேண்டும். அவரது வீரதீரச் செயலைப் பாராட்டி இந்த ஆண்டு நமது தமிழ்நாடு அரசு அவருக்கு பேரறிஞர் அண்ணா பதக்கத்தை வழங்கி கௌரவித்துள்ளது. போலவே சென்னையில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளத்தின்போது நமது என்.சி.சி. வீரர்கள் காட்டிய தன்னலமற்ற உழைப்பை நாம் பாராட்டியே ஆக வேண்டும். சென்னை மாநகராட்சியுடன் சேர்ந்து அவர்கள் இணைந்து பணியாற்றிய காரணத்தால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நேரத்தில் நிவாரணப் பொருட்களைக் கொண்டு சேர்க்க முடிந்தது. இது போன்ற இக்கட்டான சூழ்நிலைகளில் நமது என்.சி.சி. வீரர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறார்கள்.

### கொரோனா பெருந்தொற்று காலத்தில் பணிபுரிந்த மக்கள்!

அதேபோல, கொரோனா பெருந்தொற்றுக் காலத்திலும் அவர்கள் போக்குவரத்தை கட்டுப்படுத்துவது, வரிசையில் நிற்கும் மக்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்துவது உள்ளிட்ட பல்வேறு பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

குடியரசு தின அணிவகுப்பில் தங்களின் திறமைகளை வெளிப்படுத்திய ஒவ்வொரு என்.சி.சி. வீரருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய சமுதாயம் மேன்மை பெற, நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம்.

இந்தத் தருணத்தில் என்.சி.சி.யின் முக்கியத்துவம் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒழுக்கம், காலம் தவறாமை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றை இளையோர் மனத்தில் விதைக்க என்.சி.சி. உதவுகிறது. இங்கே வந்திருக்கும் ஒவ்வொருவருக்கும் எனது அன்பையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் மக்கள் சேவை தொடரட்டும். தமிழ்நாடு அரசு என்றைக்கும் உங்களுக்குத் துணை இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் முதன்மை செயலாளர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ், லெஃப்டினென்ட் ஜெனரல் கே.எஸ்.ப்ரார், ரியர் அட்மிரல் ரவிக்குமார் டிங்ரா, கமோடோர் அதுல் குமார் ரஸ்தோகி, இன்ஸ்பெக்டர் ஜெனரல் டோனி மைக்கேல் உட்பட பலர் கலந்துகொண்டனர்.







புது டெல்லியில் அண்மையில் நடைபெற்ற குடியரசு தின அணி வகுப்பில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த National Cadet Corps திட்ட மாணவ, மாணவியர்கள் இந்திய அளவில் 3 ஆம் இடம் பிடித்து நமது மாநிலத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். அவர்களின் திறமையை அங்கீகரிக்கும் விதமாக சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாராட்டு விழாவில் நம் NCC cadets–க்கு ஊக்கத்தொகை மற்றும் கோப்பைகளை வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தி மிக்ஜாம் புயலால் சென்னையில் ஏற்பட்ட பெருவெள்ளம் மற்றும் தென்மாவட்ட மழை வெள்ளப் பாதிப்புகளின் போது, NCC மாணவர்கள் ஆற்றிய மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை பாராட்டி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார். சேவை மனப்பான்மையோடு செயல்பட்டு வரும் National Cadet Corps திட்ட மாணவ, மாணவியர்களுக்கு நமது திராவிட மாடல் அரசு நிச்சயம் உறுதுணையாக இருக்கும் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

---

## வேளாண் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுகோள்!

# வேளாண் கட்டமைப்பு நிதியின்கீழ் - கடன் வசதி பெறும் திட்டம்!

## வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விளக்கம்!

சென்னை, பிப் 7 -

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வேளாண் கட்டமைப்பு நிதியின் (AIF) கீழ் கடன் வசதி பெறும் திட்டம் தொடர்பான செய்தி வெளியீடு வருமாறு :-

பயிர் அறுவடைக்குப் பின்னர், விளைபொருட்களை காய வைத்தல், சுத்தம் செய்தல், தரம் பிரித்தல், மதிப்பு கூட்டுதல் உள்ளிட்ட பணிகளுக்கான வேளாண் கட்டமைப்பு வசதி களை மேம்படுத்திட இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இது ஒரு கடன் உதவி திட்டமாகும். 2020-21 இல் துவங்கப்பட்ட இத்திட்டமானது 2032-33 வரை செயல்பாட்டில் இருக்கும்.


### திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:

**வட்டி சலுகை :**

அதிகபட்சமாக ரூ. 2 கோடி வரையிலான கடனுக்கு, ஏழு ஆண்டு காலத்திற்கு ஆண்டிற்கு 3% வட்டி குறைப்பு (Interest Subvention) வழங்கப்படுகின்றது. கடன் தவணைத் தொகையை திருப்பி செலுத்த விலக்களிக்கப்பட்டுள்ள இரண்டு ஆண்டுகள் உட்பட, அதிகபட்சம் 7 ஆண்டுகளுக்குள் கடன் திருப்பி செலுத்தப்பட வேண்டும். ரூபாய் இரண்டு கோடி வரை கடன் உத்தரவாதம் வழங்கப்படும். மத்திய மற்றும் மாநில அரசு மானிய திட்டங்களை வேளாண் கட்டமைப்பு நிதி திட்டத்துடன் ஒருங்கிணைப்பதன் மூலம் அதிக பயன்களை பெறலாம்.

### திட்டப் பயனாளிகள்:

விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPOs), சுய உதவிக் குழுக்கள் (SHGs), விவசாயக் குழுக்கள், பெண் தொழில் முனைவோர்கள், விருப்பமுள்ள கிராமப்புற இளைஞர்கள், வேளாண் தொழில் முனைவோர்கள், புதிதாக தொழில் துவங்க முன்வரும் நிறுவனங்கள் (Start Ups), தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் (PACCS), சுய உதவிக்குழுக்களின் கூட்டமைப்புகள், கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் (JLGs), கூட்டுறவு விற்பனை சங்கங்கள், பல்வகை கூட்டுறவு சங்கங்கள், மத்திய / மாநில அமைப்புகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளால் முன்மொழியப்படும் அரசு, தனியார் பங்கேற்புடன் கூடிய அமைப்புகள், வேளாண் விளைபொருட்கள் விற்பனைக் குழுக்கள் (APMCs), தேசிய மற்றும் மாநில கூட்டுறவு கூட்டமைப்புகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கூட்டமைப்புகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம்.



### திட்டக் கூறுகள்: அறுவடைப் பின் மேலாண்மைக்கான கட்டமைப்பு வசதிகள்:

மின்னணு சந்தையுடன் கூடிய விநியோக தொடர் சேவை, சேமிப்புக் கிடங்குகள் (Godowns), சேமிப்பு கலன்கள் (Silos), சிப்பம் கட்டும் கூடங்கள் (Pack houses), தரம் பிரிப்பு மற்றும் வகைப்படுத்துவதற்கான இயந்திரங்கள், குளிர்பதன வசதிகள் (Cold storages), முதன்மை பதப்படுத்தும் மையங்கள் (Primary Processing Centres), பழுக்க வைக்கும் அறைகள் (Ripening chambers) போன்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

### பொதுவான வேளாண் கட்டமைப்பு வசதிகள்:

இயற்கை இடுபொருட்கள் உற்பத்தி, நுண்ணுயிர் உற்பத்தி நிலையங்கள், நவீன மற்றும் துல்லிய பண்ணையத்திற்கான கட்டமைப்புகள், பகுதிக்கேற்ற பயிர் தொகுப்புகளை உருவாக்கி ஏற்றுமதி செய்வதற்கான வசதிகள் ஏற்படுத்துதல், அரசு மற்றும் தனியார் பங்கேற்புடன் அமைக்கப்படும் கட்டமைப்புகள், போக்குவரத்து வசதிகள் போன்ற இனங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் கடன் உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டம் குறித்த விரிவான தகவல்களை அறியவும், விண்ணப்பிக்கவும் www.agriinfra.dac.gov.in இணையதளத்தினை அணுகலாம். மேலும், விவரங்களுக்கு, அந்தந்த மாவட்டத்தில் உள்ள வேளாண்மை துணை இயக்குநர்கள் (வேளாண் வணிகம்) மற்றும் மாவட்ட தொழில் மையங்களையும் தொடர்பு கொள்ளலாம்.

இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி விவசாயிகள் வேளாண் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தங்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ளுமாறு வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.



நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான பள்ளி மேலாண்மைக்குழு தலைவர்களுக்கான மாநாட்டினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி.மு.அருணா பள்ளி கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

### அ.பாரிபாலன் தலைமை! நாகை மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில்

# மாணவ, மாணவிகளுக்கு திறனறிவுத் தேர்வு போட்டி!

### மாவட்ட செயலாளர் என்.கௌதமன் - கோவி.லெனின் - பி.எம்.ஸ்ரீதர் பரிசுகளை வழங்கினர்!

நாகை, பிப். 7 -

நாகை மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அரசு போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகளுக்கு திறனறிவுத் தேர்வு போட்டி நடைபெற்றது. காலை 10.00 மணிக்கு 200 மதிப்பெண்களுக்கு வினாத்தாள் தயார் செய்யப்பட்டு 302 மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட திறனறிவுத் தேர்வை தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் தொடங்கி வைத்தார். அதைத் தொடர்ந்து மாலை நடைபெற்ற பரிசு வழங்கும் விழாவிற்கு தகவல் தொழில் நுட்ப அணி நாகை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன் தலைமை தாங்கினார். வேதாரண்யம் நகரக் கழகச் செயலாளர் மா.மீ.புகழேந்தி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் வேதாரண்யம் மேற்கு உதயம் வே.முருகையன், வேதாரண்யம் கிழக்கு என்.சதாசிவம், தலைஞாயிறு மகா.குமார், தலைஞாயிறு பேரூர் கழகச் செயலாளர் சி.சுப்பிரமணியன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.துரைராஜ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் எஸ்.செல்வமுத்துகுமரன், பரமேஸ்வரிவெங்கிட், மா.ரெக்ஸ், காந்திமதிலோகநாதன், ஆர்.செந்தில்நாதன், ஆ.ராபர்ட்கிங் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் பரமேஸ்வரிவெங்கிட் வரவேற்றார்.

காலை நடைபெற்ற திறனறிவுத் தேர்வில் முதல் மூன்று மதிப்பெண்களை பெற்ற முதல் பரிசு பெற்ற மாணவன் அகிலனுக்கு ரூ.10,000, இரண்டாம் பரிசு பெற்ற மாணவி மேனகாவிற்கு ரூ. 7,500, மூன்றாம் பரிசு பெற்ற மாணவி ரூ. 5,000 மற்றும் திறனறிவுத் தேர்வில் கலந்து கொண்ட அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் பரிசு மற்றும் சான்றிதழ்களை நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்சசிக் கழகத்தலைவர் என். கௌதமன், தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசகர் கோவி. லெனின், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர் ஆகியோர் வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் சோ.ரவிச் சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் எல்.எஸ்.ஈ.பழனியப்பன், தகவல் தொழில் நுட்ப அணி திருவாரூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அரவிந்த், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.வி.டி.அருள், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் வே.கோ.உதயசூரியன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.எஸ்.அசோக், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் செந்தாமரைச்செல்வன், மாவட்ட விவசாய அணி தலைவர் சின்னக்குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கோவிந்தசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் நல உரிமை பிரிவு தலைவர் க.முருகேசன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர்கள் கா.அழகிரிபாலன், சி.க.மதியழகன், மாவட்ட சார்பு நிர்வாகிகள் டி.எஸ்.பாலு, எம்.எஸ்.வைத்தியநாதன், சாந்திகுமணன், தனபால், தகவல் தொழில் நுட்ப அணி ஒன்றிய, நகர, பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள் கோபி.கிருஷ்ணா, செல்வகுமார், பழனிமலைச்செல்வன், கார்த்திக், முத்தரசன், வேதாரண்யம் மேற்கு ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் பா.முருகராஜ், வே.தினேஷ் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் வேதாரண்யம் கிழக்கு ஒன்றிய தகவல் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பாளர் துரை.பாண்டியன் நன்றி கூறினார்.



திருவாரூர் மாவட்ட புத்தகத் திருவிழாவை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் திறந்து வைத்தார். சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையமங்கலம் ஜி.பாலு, ஒன்றியக் குழு தலைவர்கள் சோம.செந்தமிழ்ச்செல்வன், உமாப்ரிய பாலச்சந்திரன், நகரச் செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## போலீஸ் அ.பன்னீர்

**பிப்ரவரி 7 (2023)**



தனது இளமைப் பருவத்திலேயே பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர்மீது கொண்ட பற்றால் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

நாகப்பட்டினம் நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# திராவிட இயக்கத்தின் வெற்றி நாயகன்!



திராவிட உதயத்தின் ஆற்றலில் நிரம்பும் - கொள்கையினை
பாரெங்கும் நிறைத்து சேர்க்கும் தீரரே!
காலத்தின் காவலனாய் தெற்கிலிருந்து உதிக்கும் - சூரியனே!
அரியாசனத்தின் கடமையே! அறிவாலயத்து கண்ணியமே!
உம்கால் தொடும் வழியெல்லாம் நெறியின்
திராவிடச் சிந்தனை வளர்க்கும் போர்க்குரலே!
மடை திறந்த காட்டாற்றில் எதிரிகள் - பிடரியிட
மக்கள் வெள்ளம் அரவணைக்கும் ஆதரவு கொண்டீரே!
காலந்தரும் பொறுப்புகளின் திறன்நிறைந்த மகுடமே!
தமிழகத்து உரிமை காக்கும் திராவிடச் - சுடரே!
ஒன்றிய ஆளுமையின் அரசியல் சாசனமே!
கழகத்து மாட்சிமையே வாழ்க! வெல்க!!

1980ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் நாள் மதுரை ஜான்சிராணி பூங்காவில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் இளைஞரணி துவங்கப்பட்டது. கழகத் தலைவர் - முதல்வர் தளபதி அவர்கள் கழக இளைஞரணிச் செயலாளராக பொறுப்பேற்ற அன்று முதல் கிராமம் எங்கும் கழகக் கொடியை ஏற்றியும், தமிழகத்தில் திராவிட சிந்தனைமிக்க இளைஞர்களை ஒருங்கிணைத்து இளைஞர் அணியையும், கழகத்தையும் வலுப்படுத்தினார். திராவிட கொள்கைகளை பாசறைக் கூட்டங்கள் மூலம் தொண்டர்களுக்கும் கழக உடன்பிறப்புகளுக்கும் உத்வேகம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு முழுமையும் பயணம் செய்தார் கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள்.

“வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி”

மழையின் செம்மையை எதிர்பார்த்து உலகத்து உயிர்கள் எல்லாம் வாழ்வதைப் போல மன்னனின் செங்கோன்மையை எதிர் நோக்கி வாழ்வார்கள் எனும் வள்ளுவனின் கூற்றுக்கு இணங்க தமிழக இளைஞர்களின் நாடித்துடிப்பாய் திராவிட கொள்கை வேர் தழைத்திட 2019ம் ஆண்டு ஜூலை மாதம் கழக இளைஞர் அணிச் செயலாளராக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றார். இளைஞர் அணியின் செயலாளராக பணிப் பொறுப்பை ஏற்றதும் இளைஞர் அணியில் 30 லட்சம் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க இலக்கு நிர்ணயம் செய்து அதற்கான பணியையும் வெற்றிகரமாகச் செயல்படுத்தினார்.

கழகத் தலைவர் தலைமையில் இளைஞரணியின் முதல் மாநில மாநாடு 2007 ஆம் ஆண்டு நெல்லையில் எழுச்சிமிகு மாநாடாக தமிழக அரசியலில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அந்த வகையில் கழக இளைஞரணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்த இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு இந்திய ஒன்றியத்தின் பாசிச கூடாரங்களை கிழித்தெரியும் திராவிட சித்தாந்தம் நிறைந்த மதச்சார்பற்ற இளைஞர் படையின் தளபதியாய் இளைஞரணியின் இராண்டவது மாநில மாநாட்டை வெற்றிக்கு உரித்தாக்கிருக்கிறார்.

“கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு”

செயலை செய்வதற்கு வேண்டிய கருவிகளையும் ஏற்ற காலத்தையும் செய்யும் வகையையும் செயலின் அருமையும் நன்கு சிந்திப்பவனையே சிறந்த தலைவனாக உலகு போற்றும். அந்த வகையில்,



**மருத்துவர் ஆ.கா.தருண்**
மாநில துணைச்செயலாளர்,
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி.

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களால் இளைஞரணி செயலாளர் அவர்கள் தலைமையில் மாநாடு தேதி அறிவிக்கப்பட்ட நாள் துவங்கி மாநாட்டுப் பணிகளை பல்வேறு கட்டங்களாக நிர்வகிக்க நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களை ஒருங்கிணைப்பாளராக கொண்டு சேலம் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி ஆகியோரின் முன்னிலையில் மாவட்டக் கழக, ஒன்றியக் கழக, பேரூர்க் கழக, கிளைக் கழக, இளைஞரணி மற்றும் சார்பு அணி நிர்வாகிகளுக்கு ஆலோசனை கூட்டம் மூலம் அறிவுறுத்தப்பட்டு சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் ஆகஸ்ட் 23 ஆம் தேதி மாநாட்டின் கால்கோள் விழா துவங்கியது முதல், மாநாட்டு வேலைகள் நிர்வாகக் குழு முன்னிலையில் மும்முரமாக நடைபெற்றது.

தமிழகம் முழுமையும் அமைச்சர் பெருமக்களும், மாவட்டச் செயளாலர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கழக இளைஞரணியின் மாநாட்டுத் திடலில் பார்வையிட்டும் ஆலோசனைகளையும் வழங்கினர். இருந்த பொழுதும் அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் அவர்கள் செப்டம்பர் 27ஆம் தேதி நேரில் ஆய்வு மேற்கொண்டு கழக நிர்வாகிகளை துரிதப்படுத்தினார். நவம்பர் 3ஆம் தேதி மாநில மாநாட்டுத் திடலில் நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களால் கழக அலுவலகம் அமைக்கப்பட்டு இரவு பகலாக அமைச்சர் பெரு மக்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள் அறிவுறுத்துதலின் படி இளைஞர் அணி மாநில துணை செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளார்கள் உள்ளிட்ட துடிப்புமிக்க இளைஞர் பட்டாளமும் அணி திரண்டு கழக இளைஞரணிச் செயலாளர் தலைமை ஏற்கும் மாநாட்டின் வேலைகள் தீவிரமாயின.

மாநாட்டுப் பணிகளை ஒருங்கிணைக்க நிதிக்குழு, மேடை நிர்வாகக் குழு, வரவேற்புக்குழு ,சமூக வலைத்தளக்குழு, அலங்காரக்குழு, மருத்துவ குழு என 23 குழுவினரும் ஓய்வறியாது ஆற்றிய உழைப்பின் பலனானது நம் மாநாட்டை முழுமையடையச் செய்தது.

தந்தை பெரியார் நுழைவு வாயில், பேரறிஞர் அண்ணா திடல், முத்தமிழறிஞர் கலைஞர் மேடை, இனமானப் பேராசிரியர் அரங்கம், சேலத்து சிற்பி ஐயா வீரபாண்டியார் கொடிமேடை, கழக முன்னோடிகள் வீரபாண்டி ஆ.செழியன், வீரபாண்டி ஆ.ராஜா, சந்திரசேகரன் ஆகியோருடன் நீட் எதிர்ப்பு போராளிகளான தங்கை அனிதா மற்றும் தம்பி தனுஷ் பெயரில் நுழைவு தோரண வாயில்கள் அமைத்தும். முரசொலி புத்தக நிலையம் மற்றும் அன்பகம் வரலாற்று கண்காட்சியும் அமைக்கப்பட்டு மேலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளும் நிறுவப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

தி.மு.கழக இளைஞர் அணியின் மாநாட்டுப் பந்தலை 9 லட்சம் சதுர அடி பரப்பளவில் உருவாக்கி இந்திய நாட்டின் வரலாற்றில் சாதனை மாநாடாக நம் இளைஞரணியின் இரண்டாம் மாநில மாநாடு அமைந்திருந்தது.

மாநாட்டிற்கு முதல் நாள் நிகழ்ச்சிகளே மாநாட்டின் பெரு வெற்றியை நாடெங்கும் முன்னறிவிப்பு செய்கின்ற வகையில் நடைபெற்றன.

சென்னை - அண்ணா சாலையில் தந்தை பெரியார் திருவுருவச் சிலை முன்பு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட மாநாட்டுச் சுடர், செங்கல்பட்டு - விழுப்புரம் - கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் தாண்டி மாநாட்டுத்திடலுக்கு வந்து சேர்ந்தது. இளைஞரணி துணைச் செயலாளர்கள் கழக இளைஞரணி செயலாளர் அவர்களிடம் வழங்க, அதனை கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களில் ஒப்படைத்து - பின்னர் அந்தச் சுடரை, மாநாட்டில் அமைக்கப்பட்டிருந்த மாநாட்டு ஒளிச்சுடர் மேடையில் ஏற்றி மாநாட்டின் வெற்றி நிகழ்வை உறுதிபட இளைஞர் படையின் ஆரவாரத்திற்கிடையே இந்திய நாட்டிற்கு பறைசாற்றினார். மேலும் எல்லாவற்றுக்கும் அணி சேர்த்து வைத்தது போல் தி.மு.க. டைரடர்ஸ்சின் தமிழ்நாடு தழுவிய பிரச்சாரப் பயணம் இளைஞர்கள் மத்தியில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் தி.மு.க. டைரடர்ஸ்சின் இருசக்கர வாகன அணி வகுப்பு நடந்தது “மாநில உரிமைகள் மீட்பு” என்னும் நமது நோக்கத்தை தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சேர்த்த 250 இருசக்கர வாகனங்களில் குமரி முனையில் உள்ள உலக பொதுமறையாளர் திருவள்ளுவர் சிலை அமைவிடத்தில் இருந்து புறப்பட்டு தமிழ்நாடு முழுவதும் சுற்றி இறுதியில் மாநாட்டின் திடலுக்கு வந்து சேரும் போது சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்களாக திராவிட சிந்தனைகளை, திராவிட மாடல் ஆட்சியின் கொள்கைகளை மாநாட்டின் முதற்கட்ட வெற்றி முழக்கமாக கழக தலைவர் அவர்களின் முன்பாக அணிவகுத்துச் சென்ற காட்சி நம் கண்களில் தேங்கி நிற்கிறது.

இருள் வானத்தைத் திரையாக்கி அதில் திராவிட தலைவர்களை தூரிகையாகி ட்ரோன்களைக் கொண்டு வரலாற்றிலேயே ஒரு புதிய நவீன நிகழ்ச்சியாக நம் மாநாட்டிற்கு முந்தைய நாள் நடைபெற்றது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர், நம் தாய்த்தமிழ்நாடு, இளைஞரணியின் இலட்சியத்தில் ஒன்றான ஒற்றைச் செங்கலைத் தாங்கிய இளைஞரணி செயலாளர் உருவம், உயிருக்கும் கழக உடன் பிறப்பிற்புகளுக்கும் நிகரான உதயசூரியன் சின்னம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் “தமிழ் வெல்லும்” வாசகம் என வானில் நட்சத்திரங்களுக்குப் போட்டியாக ட்ரோன்கள் மின்னி மிளிர்ந்தது

மாநில மாநாட்டின் விடியற் பொழுதே பாசிசம் விலகி திராவிடச் சூரியன் முளைத்த கடல் இல்லா சேலத்தில் கழக இளைஞரணியினரின் தலைகளே கடலாக, அசைந்தாடிய கருப்பு சிவப்பு இருவண்ணக்கொடிகளே அலைகளாக இருந்ததைக் கண்டு இந்திய ஒன்றியமே வியந்தது அறிவோம். இத்திசை நோக்கிய சேலத்தில் தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தி.மு.க.வின் மாநில மாநாட்டில் 1997ஆம் ஆண்டு நமது கழகத்தின் கொடியை ஏற்றினார்கள். அதேபோல் 2004ஆம் ஆண்டு சேலத்து சிற்பி வீரபாண்டியார் நடத்திய மாநாட்டில் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் மாநாட்டுக் கொடியை ஏற்றினார்கள். அந்த வரிசையில் கழக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அக்கா கனிமொழி அவர்கள் கழகத்தின் கம்பீரக் கொடியினை சேலத்துச் சிற்பி வீரபாண்டியார் நினைவுக் கொடி மேடையில் ஏற்றி வைத்தார்கள். மாநாட்டுக் கொடி தெரிந்த தூரமெங்கும் கழக இருவண்ணக் கொடியை ஏந்திய லட்சோப லட்ச இளைஞர் கடலாய் சேலம் மாறியது. பல மைல் தூரங்களுக்கு அணிவகுத்தது வாகனங்கள். எத்துணை ஆழ்கடலும் அளக்கும் அளவிற்கு இளைஞரணிச் தம்பிமார்கள் மாநாட்டுத் திடலில் கரைபுரண்ட பொழுதும் கழக இளைஞரணி செயலாளர் அவர்களுக்கு பெருமிதம் ஈன்று தரும் வகையில் கழக முழக்கமான கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் அமைந்திருந்தனர். மாநாட்டு காற்பந்தல் முதல் முத்தமிழறிஞர் மாநாட்டு மேடை வரையிலும் இளைஞரணி தம்பிமார்களே முழுவதுமாக நிறைந்த மாநாடு என்றால், அது இந்தியாவிலேயே நம் தி.மு.கழக இளைஞரணி செயலாளர் தலைமையேற்ற இச்சேலத்து இளைஞர் அணி மாநாடு என்று சொன்னால் அது மிகையாகாது.

மாநாட்டில் கழக துணை பொதுச்செயலாளர்களாலும் முதன்மை கழக நிர்வாகிகளாலும் பல்வேறு தலைப்புகளில் நிகழ்த்தப் பட்ட உரைகள் அனைத்தும் திராவிட மாடல் கொள்கையின் ஆதாரங்களாக இருந்தன. நேரத்தின் நெருக்கடியிலும் திராவிட மாடல் கொள்கையினையும், சித்தாந்தத்தையும் திராவிட இயக்கத்திற்கே உரியக்கொள்கையின் வீர முழக்கம் அரங்கம் எங்கும் எதிரொலித்து இருக்கையின் நுனி நழுவாமல் கேட்போர் செஞ்சமெல்லாம் கசிந்துருக அமைந்திருந்தது. இயக்கத்தின் விரல் பழகும் இளைஞர்களின் உணர்ச்சிடோடு கலந்திட்ட வகையில் கழக முன்னோடிகளின் திராவிட இயக்க தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரின் சீரிய சுயமாரியாதை சிந்தனை, மதநல்லிணக்க உணர்வு, பெண்விடுதலை, இந்தி திணிப்பு, பாசிச ஆத்திக்கம் போன்ற உயரிய கருத்துக்கள் இளைஞர்களின் மனதில், உணர்வில், உயிரில் ரீங்காரமிடும் அளவிற்கு அமைச்சர்கள் - சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் திராவிட இயக்கப் பேச்சாளர்களிடம் சமத்துவம், சமூகநீதி, சமதர்மம் ஆகிய திராவிட கோட்பாட்டின் எழுச்சியுரை அமைந்திருந்தது.

திராவிட இயக்க தீர்மானங்களே சட்டங்களாகும் வகையில் நமது மாநாட்டுத் தீர்மானங்கள் அத்துணையும் ஒன்றிய அரசின் ஆதிக்கத்தை தாக்கும் கொள்கை முரசுகளாக அமைந்திருந்தது.

நமது மாநாட்டின் நோக்கம் “மாநில உரிமை மீட்பு” அந்த வகையில் “நீட் விலக்கு நமது இலக்கு” என்ற கொள்கையின் கீழ் களத்திலும், இணைதளத்திலும் பெற்ற கையொப்பங்களை மாநாட்டு மேடையில் கழகத் தலைவர் கரங்களில் சேர்த்தார் கழக இளைஞரணி செயலாளர் அவர்கள். மேலும் “எல்லாருக்கும் எல்லாம்” எனும் “திராவிட தத்துவம்” இந்தியா முழுவதும் நிறைகின்ற வகையில் அயராது உழைக்க இளைஞரணி மாநாடு உத்வேகம் தந்திருக்கிறது. வெல்லப்போவது சமூக நீதியும், சமத்துவமுமே என்பதை கழக இளைஞர் அணி மாநில மாநாடு நமக்கு கோடிட்டு காட்டியிருக்கிறது.

நமது இளைஞர் அணியின் இராண்டாவது மாநில மாநாட்டை வெற்றிக்கு உரித்தாக்கிய கழக முதன்மை செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர,கிளை கழக நிர்வாகிகளும் கழக உடன் பிறப்புகளும் ஆற்றிய பணி மாநாட்டின் வெற்றிக்கு இன்றியமையாததாக அமைந்தமைக்கு கணையாழி அணிவித்து மரியாதை செலுத்தினார், கழக இளைஞரணி செயலாளர் அவர்கள்.

“மன்னர் விழைய விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கம் தரும்”

வேந்தன் விரும்பும் பொருள்களுக்கு தானும் விரும்பாதிருக்கும் தன்மையானது அவ்வேதந்தனாலே நிலைத்திருக்கும் செல்வங்களை தருவது விளங்கும்

எனும் குறளின் தன்மையைப் போல சமூகநீதிக் கொள்கையின் வழியில் பயணிக்கும் திராவிட சிந்தனையின் பால் மதசார்பற்ற மண்தான் தமிழ்நாடு என்பதை சேலத்தில் எழுச்சியுடன் நடந்தேறிய கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் உணர்த்தியிருக்கிறது.

நாடும் நமதே, நாற்பதும் நமதே.

“இந்தியா” கூட்டணி வென்று, கலைஞரின் முழக்கமான “மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி” என்பது இந்தியாவின் முழக்கமாகும்.


கலைஞர்
100
1924 - 2023
கல்வி மட்டுமே
சமத்துவம்
மலரச்செய்யும்
மிகப்பெரிய ஆயுதம்
SRI ARTS
7.2.2024 - புதன்கிழமை பல்வேறு
நிகழ்ச்சிகளுக்கு திருச்சி வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வருக...வருக...என வரவேற்கிறோம்...
மாண்புமிகு. கே.என்.நேரு அவர்கள்
கழக முதன்மைச் செயலாளர்,நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA.,
மாவட்டக் கழகச் செயலாளர்-பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

# திராவிடப் போராளிகள்

**53** ■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

## மகளிர் கண்ட கொள்கை உரம் இராணி அண்ணாதுரை

ஓவியம் : ரவி பேலட்



*ம*களிர் மன்றம், 'லேடீஸ் கிளப்' போன்றது அல்ல' மகளிர் மன்றத் துவக்க விழாவில் தோழியர் இராணி அண்ணாதுரை அன்பழைப்பு', என்ற தலைப்பில் 6.11.1956 ஆம் தேதி வெளியான 'நம்நாடு' இதழில் வெளியான செய்தியை இப்போது படிப்பவர்கள் வியப்படையக்கூடும். ஆனால், இராணி அண்ணாதுரை என்ற திராவிடப் போராளியின் வாழ்க்கைப் பதிவுகள் இதைப் போல நாம் படித்திராத வரலாற்றுப் பக்கங்களை அடையாளம் காட்டுகின்றன.

சென்னை அருகிலுள்ள திருமுல்லைவாயில் என்ற சிற்றூரில் பக்தியும் சமய நம்பிக்கையும் நிறைந்த குடும்பத்தில் பிறந்த இராணி தன் 15-வது வயதில் பேரறிஞர் அண்ணாவை மணந்தார். பெற்றோர் ஏற்பாடு செய்த திருமணம்தான். கணவரின் கருத்துக்கேற்ப வாழவேண்டுமென்றாலும், ஒரு நாத்திகக் கணவரின் பொது வாழ்க்கையில் இணைந்து செயல்படுவது அவ்வளவு எளிதாக இருக்காது. ஆனால், இராணி அம்மையாரோ குடும்ப வாழ்வில் மட்டுமின்றி, பொது வாழ்விலும் அண்ணாவின் இணையராகப் பயணித்தார். எப்போதும் பொதுக்கூட்டம், போராட்டம், சிறைவாசம் என்பதை வழக்கமாகிக் கொண்ட தந்தை பெரியாரின் 'சுவீகார புத்திரனா'கவே வாழ்ந்து கொண்டிருந்த பேரறிஞர் அண்ணா, இராணி அம்மையாரையும் தன் வழிக்குப் பழக்கிவிட்டார்.

### வாழ்த்துக் கடிதம்

இராணி அம்மையாரின் கொள்கை உரம் எத்தகையது என்றால், 1938 ஆம் ஆண்டு தந்தை பெரியார் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக, பேரறிஞர் அண்ணாவுக்கு நான்கு மாதம் சிறைதண்டனை விதிக்கப்பட்டது. அந்தச் செய்தி வெளியான 02.10.1938 நாளிட்ட 'குடிஅரசு' இதழில் அண்ணாவை வாழ்த்தி, இராணி அம்மையார் எழுதிய வழியனுப்புக் கடிதமும் வெளியிடப்பட்டது.

"வீரத்தலைவரே...! சுகமாய்ப் போய்வாரும்...!

அண்ணாதுரைக்கு மனைவியார் வாழ்த்து

அன்புமிக்கத் தலைவரே! தங்களுக்கு இன்று முதல் நான்கு மாதம், கட்டாய இந்தி கூடாதென்று பேசியதற்காக காங்கிரஸ் அரசாங்கத்தார் சிறைதண்டனை அளித்ததை மகிழ்வுடன் ஏற்றுச் சிறைக்குச் சென்ற தங்கள் வீரத்தைப் பாராட்டுவதுடன், தங்களை வாழ்க்கைத் துணையாக, யான் பெற்ற செல்வம் இன்றுதான் பெற்றேன். தாங்கள் தமிழ்த்தாயின் தவப்புதல்வரென்ற பேற்றை இன்றுதான் பெற்றீர்கள். தங்கள் வீரத்தையும், தமிழ்த் தொண்டினையும் தமிழ்நாடு என்றும் மறக்காது. தமிழ்த்தாய் தங்கள் பக்கம் நின்று காப்பாள். வீரத்துடன் சிறைசென்று வருக.

இப்படிக்கு,

தங்கள் வாழ்க்கைத் துணைவி

ராணியம்மாள்"

மேலும், அண்ணா அவர்கள் சிறைச்சாலையில் இருந்தபோது அவரைப் பார்க்கச் சென்ற இராணி அம்மையாருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதையும் ஏற்றுக்கொண்டார்.

1938 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னை ஒற்றைவாடை அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில் பங்கேற்றவர்களில் இராணி அம்மையாரும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

**1996 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் தேதி இறக்கும்வரை ராணி அம்மையார், திராவிட முன்னேற்றக் கழகக் குடும்பங்களின் தாயாகப் போற்றப்பட்டார்.**

1957 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் முதல்முறையாகத் தேர்தலில் போட்டியிட்டது. அப்போது இராணி அம்மையார் தன்னோடு மகளிர் மன்றத் தோழர்களை இணைத்துக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்காக பிரச்சாரம் செய்தார். ஆயினும், அண்ணா அவர்களின் தோல்வி இராணி அம்மையாரை மனம் வருந்தச் செய்தது. மீண்டும் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் அண்ணா அவர்கள் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறைச்சாலையில் இருந்தபோது அவரிடம் தனியாகப் பேசக்கூட வாய்ப்பற்ற நிலையில் இயக்கத் தலைவர்களோடு சேர்ந்துதான் அண்ணாவைப் பார்த்தார். 22.05.1964 அன்று அண்ணாவைக் காண இராணி அம்மையார் குடும்பத்துடன் சிறைச்சாலைக்குச் சென்று அண்ணாவைப் பார்க்க அனுமதியின்றித் திரும்பிச் சென்ற நிகழ்வை பேரறிஞர் அண்ணா பதிவு செய்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் பெரும் வெற்றி பெற்று 06.03.1967 அன்று அண்ணா அவர்கள் முதல்வர் பதவியேற்றபோது இராணி அம்மையாரைத் தன்னுடன் அழைத்துச் செல்லவில்லை. தானாகவே குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு பதவி ஏற்பு விழா மண்டபத்துக்குச் சென்று அந்தக் காட்சியைக் கண்டார் இராணி அம்மையார். ஆனால், அதைப் பற்றியும் அவருக்கு வருத்தம் இல்லை. தமிழ்நாட்டின் வரலாற்றில் இடி விழுந்ததுபோல் ஏற்பட்ட பேரறிஞர் அண்ணாவின் மறைவு இராணி அம்மையாரை எப்படித் தாக்கியிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

### மேலவை உறுப்பினர்

அண்ணாவின் மறைவுக்குப் பின் இராணி அம்மையார் தொடர்ந்து பொது வாழ்விலும் இயக்கத்தின் செயல்பாட்டிலும், ஈடுபாட்டுடன் இருக்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்த கலைஞர் அவர்கள் இராணி அண்ணாதுரை அம்மையாரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பதவியேற்கச் செய்தார். 1996 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் தேதி இறக்கும்வரை ராணி அம்மையார், திராவிட முன்னேற்றக் கழகக் குடும்பங்களின் தாயாகப் போற்றப்பட்டார்.

1956 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் மன்றத் தொடக்க விழாவில், இராணி அண்ணாதுரை அம்மையார் ஆற்றிய உரை இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறது.

"மகளிர் மன்றம் என்றதும் பலருக்கு-அதிலும் ஆண்களுக்கு, ஏன் இந்த மன்றம்? என்று தோன்றலாம். பெண்களில் சிலர்கூட, மகளிர் மன்றம் என்று ஒன்று வேண்டுமா? என்று கேட்கக்கூடும். சென்னை போன்ற இடங்களில் -அதுவும் மயிலாப்பூர், மாம்பலம் போன்ற இடங்களில் உள்ள லேடீஸ் கிளப்பைப் போன்றது அல்ல.

நாம் ஆரம்பித்திருக்கும் மகளிர் மன்றம் நாமும் நமது குடும்பத்தாரும் நாடும் நன்றாக வாழ்வதற்குத் தேவையான சீர்திருத்தங்களைச் செய்வதற்கு பாடுபடும். மூடநம்பிக்கைகளை மாற்றி, நல்ல கருத்துக்களை எங்கும் பரப்புவதற்கு பாடுபடும்.

### உரிமைகள் ஏட்டளவில்தானே:

நமது நாட்டில் பெண்களுக்குப் பல குறைபாடுகள் இருக்கின்றன. சமநீதி, சமவுரிமை என்று ஏட்டளவில் பலர் எழுதினாலும்கூட பெண்களுக்கு உரிமையானவைகள் தரப்படவில்லை.

ஒரு குடும்பத்தில் ஆண்களைப் படிக்க வைப்பதில் காட்டும் அக்கறையைப் பெண்களைப் படிக்க வைப்பதில் காட்டுவதில்லை.

பெண்கள் கல்வி விஷயத்தில் தனிப்பட்டவர்களைவிட அரசாங்கம் அதிக ஊக்கம் தரவேண்டும்; அதிக வசதிகள் செய்து தரவேண்டும். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பெண்கள் இலவசமாகப் படிப்பதற்கு அனுமதி தரவேண்டும். வசதியற்ற ஏழை பெண்களுக்குத் தனியாகத் தங்கும் விடுதிகளும், பண உதவிகளும் செய்யவேண்டும். சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட வகுப்பினர், என்பவர்களுக்கு விசேட சலுகைகள் அரசாங்கம் தருவதுபோல் பெண்களுக்கும் விசேட சலுகைகள் தரப்பட வேண்டும். ஏனெனில், சமூகத்தில் பெண்கள்தான் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆகவே, அரசாங்கம் பெண்களுக்குத் தனியாக உரிமைகள்-உதவிகள் அளித்து, கல்வித்துறையில் பெண்கள் முன்னேற்றம் அடைய உதவ வேண்டும்." என்று இராணி அண்ணாதுரை அம்மையார் 1956 ஆம் ஆண்டு மகளிர் மன்றத் தொடக்க விழாவில் எடுத்துக் கூறிய ஒவ்வொரு அறிவுரையையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முதல்வர் கலைஞர் அவர்கள் செயல்படுத்தத் தொடங்கினார்.

தற்போது தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடைமுறைப்படுத்தியுள்ள மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு புதுமைப்பெண் திட்டமும், பல்வேறு பணிகளுக்காக வெளியூருக்குச் செல்லும்பெண்கள் அச்சமின்றித் தங்குவதற்கு உருவாக்கப்பட்டுள்ள 'தோழி' மகளிர் விடுதிகளும் இராணி அம்மையார் அறிவுரையின் தொடர்ச்சியாகவே விளங்குகின்றன, என்பதே இராணி அண்ணாதுரை என்ற திராவிடப் போராளியின் சுவடுகளைப் பேசும் செய்திகளாகும்.

(வருவார்கள்...)

---

## அதானி லாபத்துக்கு அரசு ஆய்வுகள் பலி?

ஒன்றிய அரசு இடைக்கால நிதிநிலை அறிக்கையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைக்கான நிதியை 1.2%, சுகாதார ஆய்வுகளுக்கான நிதியை 0.7% மட்டுமே அதிகரித்திருக்கிறது. உயிரித் தொழில்நுட்பத் துறைக்கான நிதியை 16% குறைத்திருக்கிறது.

ஆனால், உயிரித் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற துறைகளில் தனியார் ஆய்வுகளை அதிகரிக்க ரூ.1 லட்சம் கோடி நிதியிலான திட்டத்தை அறிவித்திருக்கிறார் நிர்மலா சீதாராமன்.

ஹிண்டன்பர்க் அறிக்கைக்குப் பிறகு அதானி குழுமத்தின் மதிப்பு 150 பில்லியன் டாலர் அளவுக்குச் சரிந்திருக்கிறது.

இழப்பில் இருந்து மீள பல வழிகளிலும் முயற்சித்துக் கொண்டிருக்கும் அதானி குழுமம், அதானி கிரீன் எனர்ஜியின் மின்னுற்பத்தித் திறனை அடுத்த 6 ஆண்டுகளுக்குள் 45 கிகா வாட்களாக அதிகரிக்க இலக்கு நிர்ணயித்திருக்கிறது. 8 வங்கிகளிடம் கடன் திரட்டும் முயற்சியிலும் அந்நிறுவனம் ஈடுபட்டிருக்கிறது.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் தனியார் ஆய்வுகளை அதிகரிக்க, ஒன்றிய அரசு காட்டும் ஆர்வத்தையும், அதானி குழுமம் அந்தத் துறையில் தனது பாதையை விரிவுபடுத்த மேற்கொள்ளும் முயற்சிகளையும் தொடர்புப்படுத்தி உற்றுநோக்க வேண்டியது அவசியமாகிறது.

---

## :ப்ளாஷ்பேக்





அய்யப்பன்

### பேச்சுப் போட்டி பரிசு!

2009-ஆம் ஆண்டுப் பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டை முன்னிட்டு, திருவாரூரில் மாவட்டக் கழகம் சார்பாக பேச்சுப் போட்டி நடைபெற்றது. அப்போது துணை முதலமைச்சராக இருந்த தளபதி அவர்கள் வெற்றியாளர்களுக்குப் பரிசளிக்கும் விழாவுக்கு வருகை தந்தார். என் தங்கை ஆர்.சிவசங்கரி அவர்கள் திருவாரூர் மாவட்ட அளவில் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்றதற்காகப் பாராட்டுச் சான்றிதழும், ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையும் தலைவர் கைகளில் பெற்றார். அவருடன் நானும், எங்கள் தாயார் ஆர்.சத்யா ஆகியோரும் உடனிருந்தோம். மேடையில் கழக முன்னோடிகள் டி.கே.ஜி.நீலமேகம், எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் ஆகியோர் உடனிருந்தார்கள்.

**-ஆர்.அய்யப்பன், பந்தநல்லூர், தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


**கருவூலம்**

## இந்தி எதிர்ப்பில் கலைஞரின் உறுதி!

**1952-ஆம் ஆண்டு கலைஞர் தலைமையிலான இந்தி எதிர்ப்பு ஊர்வலம், திருச்சி தெப்பக்குளம் பகுதி அஞ்சல் நிலையத்தை வந்தடைந்தது. எட்டாத உயரத்தில் சரிவான ஓட்டுக் கூரையின் உச்சியில் இந்திப் பெயர்ப்பலகை. இருவரைக் குனிய வைத்து, கூரையின் மேலே ஏறினார் கலைஞர். சரிவில் மெல்லத் தவழ்ந்து இந்தியை அழித்தார்.அதே நாள், தந்தை பெரியாரும் அங்கு போராட்டத்தில் இருந்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 381




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131